Registered No. M-4483

Madras War Review (TAMIL) 24-3-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV   1944-ம்௵ மார்ச்சு௴ 24௳, வெள்ளிக்கிழமை   இதழ் 29

லார்ட் லூயி மௌண்ட் பேட்டன்

மகோன்னத சேவை

"ஹுகாங் பள்ளத் தாக்கு வழியாக வெகு விரைவாக முன்னேறினீர்கள்; எதிரிகளோடு நடைபெற்ற பல போராட்டங்களிலும் வெற்றி பெற்றீர்கள். இவற்றால் உங்களுக்குக் கௌரவமும் புகழும் உண்டு

பலமான எதிரியோடு கடினமானதோர் நாட்டில் போராடிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் அவர்களை விட நன்றாகவும், சாமர்த்தியமாகவும் போராடிக் கொண்டிருக்கிறீர்கள். சமீபத்தில் மெய்ங்க்வான்-வாலாபும் பகுதியில், எதிரியின் பல மிகுந்த, தேர்ச்சி வாய்ந்த படைகளை, தலை சிறந்த முறையில் வென்றீர்கள்

இது மட்டுமா? விமானப் படையைச் சேர்ந்த உங்கள் தோழர்கள் உங்களுக்குப் பக்க பலமாக இருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் நிச்சயமாக வெல்ல முடியும் என்று தெரிந்து, எதிரிகளை நீங்கள் மேலும் நெருக்குகிறீர்கள்

லெடோ போர் முனையில் போராடுகிறவர்களே! லெடோ ரோட் வழியாக முன்னேறிப் போய்க் கொண்டிருக்கிறீர்கள். நமக்குக் கூட்டு வெற்றியை உறுதிப் படுத்தும் முறையில், நீங்கள் மகோன்னத சேவை புரிந்து கொண்டிருக்கிறீர்கள்

சமீபத்தில் நான் அங்கே வந்திருந்த போது, ஜெனரல் ஸ்டில்வெல் வீரத் தலைமையில் நீங்கள் எவ்வளவு தைரியத் தோடும் உணர்ச்சியோடும் போராடினீர்களென்று நேரிலே கண்டேன். உங்களுடன் கழித்த பொழுதைக் குறித்து நான் எக்காலத்திலும் பெருமை கொள்ளுவேன்

லார்ட் லூயி மௌண்ட் பேட்டன், வட பர்மா போராட்டத்தைக் குறித்து மார்ச்சு மாதம் 20-ம் தேதி விடுத்த செய்தி

பொருளடக்கம்.

	பக்கம்.
முகப்புப் படம் : லார்ட் லூயி மௌண்ட் பேட்டன்.	1
மகோன்னத சேவை	1
முரசொலி	2
ஓங்கோல் விமானி	2
எச். பி. பி.	2
தலையங்கம் : ரஷியப் போரில் ஜெர்மனி நிலைமை.	3
போர் முனை நிகழ்ச்சி விளக்கம்	4
செஞ்சிலுவைப் பிரசார ஒலி பரப்பு	5
தலை வணங்குகிற வரை ஜப்பானை நொறுக்க வேண்டும்	6
ஹிட்லரும் முஸோலினியும் பேனு ஸ்டாண்டுகள் ..	7
கெட்ட எண்ண முள்ள ரயில் சிப்பந்திகள் ..	8
வானொலி நாட் குறிப்பு	9
கொள்கை ஒன்றே	10
யுத்த நாட் குறிப்புக்கள்	12

முரசொலி

"**மிருகத் தனமான ஜப்பானியர்களை, அன்புடையவர்களாக மாற்றும் சக்தி, அந்நிய நாட்டுக் காரியாலயத்தாரிடமோ வேறு யாரிடமோ கிடையாது.**"

—மிஸ்டர் ஈடன், பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரி
காமன்ஸ் சபையில் மார்ச்சு மாதம் 15-ம் தேதி, யுத்தக் கைதிகளை ஜப்பானியர் நடத்தும் முறை பற்றிக் கூறியது.

* * * *

"**பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த தோர் அங்கமாக அயர்லாந்து கருதப்பட்டாலும், விசேஷ யுத்த கால விதிகளினுல் கிடைக்கும் நன்மைகளுக்கு அது உரியதாகாது.**"

—மிஸ்டர் பி. இ. ஈவான்ஸ்,
குடியேற்ற நாட்டு உதவி மந்திரி மார்ச்சு மாதம் 21-ம் தேதி கூறியது.

* * * *

ஓங்கோல் விமானி

குண்டூர் ஜில்லா ஓங்கோலைச் சேர்ந்த வர், விமானிபி. என். ராவ். இவருக்கு வயது 29. இவர் இப்போது இந்திய விமானப் படையில் சேர்ந்து கொண்டு, பர்மா மீது போராட முதன் முதல் போயிருக்கிறுர். ஜப்பானியர் வண்டிகளையும் படகுகளையும் நாசஞ் செய்து மகிழ்ந்து கொண்டிருக்கிறுர். முதன் முதலாக, குண்டூர் ஜில்லாவிலிருந்து விமானப் படையில் சேர்ந்தவர் இவர் தான். இவர் கீழ்க்கண்டவாறு கூறுகிறுர் :—

"வடமேற்கு எல்லைப் புரத்தில் நான் போராடிக் கொண்டிருந்திருக்கிறேன். ஆனுல், இயற்கை அழகு மிகுந்த பர்மியக் காடுகளுக்கு மேலே பறக்க நான் ஆசைப் படுகிறேன். இந்த முன்னணி தளத்திற்கு நான் வந்தது முதல், ஜப்பானியர்களோடு போராடுவதற்கு பல முறை போயிருக்கிறேன். அவர்கள் போக்கு வரவுப் பாதைகளைச் சுட்டுச் சேதப்படுத்தியிருக்கிறேன். அன்ருெரு நாள் 15 பெரிய வண்டிகளில் சாமான்களை எதிரிகள் ஏற்றிக்கொண்டு வருவதைக் கண்டேன். அந்த வண்டிகளைப் பல முறை சுட்டேன். அவற்றி லிருந்தவர்கள் குதித்து விட்டார்கள். இவர்களில் அநேகர் மரணமடைந்தார்கள்."

* * * * * *

எச். பி. பி.

தனிப்பட கட்டுப் படுத்தப்பட்டிருக்கும் உணவுப் பொருள்கள், மற்றப் பொருள்களின் விலைகள் நீங்கலாக, ஏனைய பொருள்களின் அடக்க விலைக்குமேல், 20 சதவிகித லாபத்திற்குமேல், அல்லது அரசாங்கத்தார் விதித்திருக்கும் உயர்ந்த பக்ஷ அதிகமான விலைக்கு அதிக விலை கடைக்காரன் சொன்னுல், இலாபம் வைத்து விற்க, கண்ட்ரோலர் ஜெனரல் அனுமதித் திருந்தாலல்லது, அப்படி விற்கிறவர்கள் 1943-ம் வருஷத்திய அக்கிரமச் சேமிப்பையும் அநியாய லாபத்தையும் தடுக்கும் அவசர சட்டத்தின் 6-வது விதியின்படி குற்றவாளிகளாகிருர்கள். ஒரு பொருளை வாங்குபவரை வேருெரு பொருளையும் வாங்கும்படி வற்புறுத்துவதும், குற்றமாகும்.

அனுமதிக்கப்பட்டிருக்கும் விலையைவிட, அதிக விலைக்கு ஒரு வியாபாரி ஒரு பொருளை உங்களுக்கு விற்றதாக நீங்கள் நினைத்தாலும், நீங்கள் விரும்பாத பொருளை வாங்கும்படி உங்களை வற்புறுத்தினுலும் **வெளியூர்களில் வியாபார வரி உத்தியோகஸ்தர்களுக்கும் சென்னையில் சிவில் சப்ளை கமிஷனருக்கும் தகவல் கொடுங்கள்.**

ஞாபகமிருக்கட்டும் : **பொருள்களை வாங்கும் ஒவ்வொருவரும் ஒரு இன்ஸ்பெக்டரைப் போல் வேலை செய்தால் மட்டுந் தான் இந்த அவசரச் சட்டத்தை வெற்றிகரமாக அமுல் நடத்த முடியும்.**

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1944-ம் ஸூ மார்ச்சு மீ 24 உ, வெள்ளிக்கிழமை | இதழ் 29

ரஷ்யப் போரில் ஜெர்மனி நிலைமை

ஜெர்மன் படைகளை டினிஸ்டருக்கும் பாசரோபியாவுக்கும் விரட்டி யடிக்க வேண்டும். இது தான் மார்ஷல் ஷுகோவின் நோக்கம். பாசரேபியா வள மிகுந்த நாடு. இது முன்னர் ருமேனியாவுக்குச் சொந்தமா யிருந்தது. இங்கே நான்கு போர் முனைகளில் ரஷ்யப் படைகள் தாக்கிக் கொண்டிருந்தன. கூட்டங் கூட்டமாகவும் தாக்கினார்கள். இந்தப் பகுதி பிர்னெபோலிலிருந்து கெர்சான் வகை வியாபிக்கிறது ; அதாவது 400 மைல் விஸ்தீரண முள்ளது. இங்கே தான் ஜெர்மன் படைத் தலைவரான வான் மான்ஸ்டைன் 5 லட்சம் பேர்களைக் கொண்ட 50 டிவிஷன்களையும் அமைத்திருந்தார். தான் வெற்றி யடைவது முடியாத காரியம் என்று அவருக்கு நன்றாகத் தெரியும். தன் படைகளுக்கு கடும் சேதம் ஏற்படு மென்றும் அவர் நன்கு உணர்ந்திருந்தார். என்றாலும், அவர் இத்தனை ஆபத்துக்களுக் கிடையில் தன் பெரும் படையுடன் இருப்பது ஏன் ? இதற்குத் தகுந்த காரணங்கள் இருக்கத் தான் வேண்டும். முதலாவதாக, கிரிவாய் ராக்கிலுள்ள இரும்புச் சுரங்கங்களையும் நிகோபோலிலுள்ள "மாங்கனீசை"யும் விட்டுப்போக அவருக்கு மனங் கொள்ள வில்லை போலும். இவை தம் கையை விட்டுப் போன வுடனேயே, வான் மான்ஸ்டைன் பின் வாங்கி யிருக்கவேண்டும். ஆனால் பின் வாங்கவில்லை. ஆகவே, வேறு காரணங்கள் யாதேனும் இருக்கத் தான் வேண்டும். எவ்வளவு படைகள் சேதமானாலும் பாதக மில்லை. எவ்வளவு கொடுங் கஷ்டங்களையும் சகித்துக்கொண்டு அங்கேயே தான் இருக்க வேண்டு மென்பது ஹிட்லருடைய கட்டளை. இவ்வளவு கடுமையான கட்டளையை அவர் பிறப்பிக்க வேண்டிய அவசியம் என்ன ? இதில் தான் இதன் இரகசியம் அடங்கி இருக்கிறது. இது ஒரு அரசியல் தந்திரம். உக்ரேய்ன் பகுதியில் ரஷ்யப் படைகளோடு வான் மான்ஸ்டைனுடைய படைகள் போர் கொடுத்துக் கொண்டிருக்க வில்லை யானால், ரஷ்யப் படைகள் ருமேனியா மீது படை யெடுத்து வந்து விடக் கூடும். இதைத் தவிர்க்க வேண்டித் தான், ஹிட்லர் அரும்பாடு படுகிறார். ஏன்? ருமேனியாவில் குழப்பம் மிகுந்திருக்கிறது. மார்ஷல் டைட்டோவின் படைகள் ஜெர்மனிக்கு விரோதமாகக் கிளம்பி வலுத்துக் கொண்டு வருகின்றன. இந்தச் சமயத்தில் ரஷ்யாவும் ருமேனியா மீது படை யெடுத்தால், காற்றும் நெருப்பும் ஒன்றாகச் சேர்ந்தாற் போலத் தான். பிறகு பால்கன் நாடுகள் அனைத்திலுமே ஜெர்மன் ஆதிக்கம் கலகலத்து விடவுங் கூடும். அப்படியானால், எத்தனை காலத்திற்குத் தான் வான் மான்ஸ்டைன் போராடிக் கொண்டிருக்க முடியும் ? ஒரு நாள் அவர் தோற்கத் தான் போகிறார் ; அப்போது ரஷ்யப் படைகள் ருமேனியா மீது படை யெடுத்து வரக் கூடுமே. அப்போது ஹிட்லர் என்ன செய்ய முடியும் என்னும் கேள்வி எழலாம். உண்மை தான். ஹிட்லர் இயற்கை யன்னையின் உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். வசந்த காலத்தில் பனி உருகும். அக் காலத்தில் படைகள் போக்கு வரவு பெரிதும் தடைபடும். இந்தச் சந்தர்ப்பத்தை எதிர் நோக்கிக் கொண்டு தான், ஹிட்லர் வான் மான்ஸ்டைனுக்கு அந்தக் கட்டளையைப் பிறப்பித்தார். இதற்கு முந்திய வருஷங்களை விட, இந்த வருஷம் வசந்த காலம் விரைவாக வந்து விட்டது. தெற்கு உக்ரேனியா முழுவதையும் சகதியாக்கி விட்டது. என்றாலும் சோவியத் படைகளின் முன்னேற்றத்தை தடை செய்ய வசந்த காலத்தினால் முடியவில்லை. ஆகவே தான், வான் மான்ஸ்டைன் இடிந்து போயிருக்கிறார்.

இயற்கையையும் எதிர்த்து நின்று ரஷ்யப் படைகள் வென்றன வென்றால், அது பெரிதும் ஆச்சரியப்படக் கூடிய விஷயந் தானே. இது எப்படி சாத்தியமானது? வலது புரத்தில் மார்ஷல் ஷுகோப் (ரஷ்யப் படைத் தலைவர்) சரியானபடி தாக்கிக் கொண்டிருந்தார். ஒடெஸ்ஸா-லோ ரயில்வே வெட்டி விடப்பட்டது ; கொஞ்ச காலத்திற்கு முன்பு தாம் வெட்டிய ரயில் பாதைக்கு மேற்கே அவரது படைகள் திடீரென்று பாய்ந்து வீரமாகத் தாக்கி டினீப்பர் வளைவிற்குள்ளிருந்த 50 ஜெர்மன் டிவிஷன் படைகளையும் செயலற்றுப் போகும் படிச் செய்து விட்டார்கள். அப்போது ருமேனியாவிற்குத் தப்பிப் போகலா மென்றாலும் 3 சிறிய ரயில்வேக்கள் மட்டுந் தான் ஜெர்மானியர்களுக்கு இருந்தன. இவை கிளை ரயில்வேக்கள் தான். ஒற்றைப் பாதை. ஆகவே, பெரிய ரயில்வேக்களில் ஏற்றிப்போகக் கூடிய அளவில், ஒரு பாதிக்குத் தான் ஏற்றிப் போக முடியும்.

ஒடெஸ்ஸா-லோ ரயில்வே துண்டிக்கப் பட்ட வுடனே, ரஷ்ய உக்ரேனியப் போர் முனையில் அமர்க்களமா யிருந்தது. வான் மான்ஸ்டைன் படைகளைத் துண்டித்து விடவேண்டு மென்பது தான் இவர்கள் நோக்கம். அப்போது தான், டினீஸ்டர் வழியாக, ஜெர்மன் படைகள் முறைப் படிப் பின் வாங்கிப் போக முடியாது. இந்த நோக்கம் பெரும் பாலும் ஈடேறியது என்று சொல்லலாம். என்றாலும், முடிவு என்னவாகு மென்று இப்போது நாம் எதுவும் சொல்லுவதற்கில்லை. இப்போது ரஷ்யர்களுக்கு, ஜெர்மானியர்களை விட மேலான ஆள் பலமும், தளவாட பலமும், போக்கு வரவு சாதனங்களுமிருக்கின்றன. ஒடெஸ்ஸா-டெர்ன போல் ரயில்வே லைனைத் துண்டித்த பிறகு, அந்தப் பகுதி முழுவதிலும் ரஷ்யர்கள் ஆதிக்கம் பெற்று விட்டார்கள். என்றாலும், அந்த இரண்டு நகரங்களையும் ஜெர்மானியர் அரும்பாடு பட்டுக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ரஷ்யப் படைகள்

பருஸ்குரோபை வளைத்துக் கொண்டு விட்டன வென்றே சொல்லலாம். மீண்டும் லோ என்னும் மகத்தான கோட்டையைத் தாக்க மார்ஷல் ஷுகோப் முயற்சித்துக் கொண்டிருக்கிறார். போப்னேவுக்குத் தெற்கேயுள்ள டப்னேவையும் சோவியத் படைகள் கைப்பற்றிக் கொண்டன. இடது பக்கத்திலுள்ள வென்னிட்சாவும் ஷ்மெரிங்காவுங் கூட ரஷ்யர்கள் வசமாயின. ஷுகோப் படைகளும் கோனியேப் படைகளும் உமானைக் கைப்பற்றிய பிறகு, பக் ஆற்றின் மத்தியப் பகுதிகளுக்கு முன்னேறிப் போய், டினீஸ்டர் பள்ளத் தாக்கு வழியாக விசிறிப் பாய்ச்சலாச் சென்று, விரைந்து பின் வாங்கிக் கொண்டிருந்த ஜெர்மன் படைகளைத் தாக்கிக் கொண்டே ஒடெஸ்ஸா ரயில்வேயைச் சேர்ந்த வக்மியார்க்கா என்னும் ஜங்ஷனையும் துண்டித்து விட்டார்கள். இது ஷ்மெரிங்காவுக்கும் ஸ்லொபோட்காவுக்கும் இடையே இருக்கிறது.

இனி, ஜெர்மனிக்கும் ஆஸ்திரியாவுக்கும் உள்ள தொடர்பைக் குறித்து ஒரு சிறிது கவனிப்போம். சென்ற 4½ வருஷங்களாக ஹங்கேரி ஒரு வகை சுயேச்சையை யனுபவித்து வந்தது. அது பெயரளவில் தான் சுயேச்சையே யொழிய, செயலளவி லல்ல. 1943-ம்௵ செப்டெம்பர்௴ 23௳ மிஸ்டர் சர்ச்சில் கூறிய வார்த்தைகள் பலித்துவிட்டன. அவர் சொன்னார்: "யுத்தத்தை விரைவில் முடிக்க அச்சு நாடுகளுடன் தோழமை கொண்டுள்ள நாடுகள் உதவி யிருந்தால் அந்நாடுகளுக்கு மீட்சி கிடைக்க வழி யுண்டாகலாம்" என்று பார்லிமெண்ட் சபையில் கூறினார். இவர் அப்படி கூறிய போது ஹங்கேரியை மனதிற் கொண்டு தான் கூறி யிருக்கவேண்டும். ஏனென்றால் மீட்சி பெற வேண்டி, நெடு நாட்களாகவே ஹங்கேரியில் கலவரங்கள் மும்முரமா யிருந்தன. ஆகவே, நாஜிஸத்தைக் குறித்து தப்பர்த்தமாக ஹங்கேரிய மக்கள் போதிக்கப்பட்டார்கள். தமது நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ளுவதற்கு ஹிட்லருடைய உதவி இனித் தேவை யில்லை யென்று கண்டார்கள். தாம் கைப்பற்றிய நாடுகளோடு விலகிக்கொள்ள தம்மை ஜெர்மானியர்கள் அனுமதிப்பார்களென்று ஹங்கேரியர்கள் எதிர்பார்த்தார்கள். இது ஒரு முட்டாள்தனமான நம்பிக்கை. ஏனென்றால், இப்போது எப்படி ஜெர்மனி கட்டாயமாகத் தோற்று விடும் எனத் தக்க நிலையி லிருக்கிறதோ, அது போலவே தான், சென்ற வருஷம் செப்டெம்பர் மாதத்திலும் இருந்தது. துரதிர்ஷ்ட வசமாக, ஹங்கேரி வெகுவாக தாமதித்து விட்டது. "பருவத்தே பயிர் செய்" என்னும் பழமொழியை அடியோடு மறந்து விட்டது. இதற்குக் காரணம், அதன் பேராசையே. இதன் பேராசை காரணமாகத் தான், ஹிட்லர் ஹங்கேரியைக் கைப்பற்றி, அதன் எண்ணத்தில் மண்ணைப் போட்டார். நாஜிகள் வீசிய வலையி னின்று தப்ப, ஹங்கேரியினால் முடிய வில்லை. யுத்தத்தின் நாசக் கொடுமைகளி னின்றும் தப்ப முடிய வில்லை. இப்போது, தம் எண்ணத்தை நாஜிகள் நிறைவேற்றிக் கொண்டார்கள். ஹங்கேரியையும் ஜெர்மனியோடு இணைத்துக்கொள்ள வேண்டுமென்பது தான் அவர்கள் எண்ணம். அந்த எண்ணமும் பூர்த்தியாகி விட்டது.

கலவரங்கள் விளைப்பதற்கு ஹங்கேரியர்களுக்குச் சந்தர்ப்பங்கள் வாய்க்கா திருந்திருக்கலாம். ஆனாலும் யூகோஸ்லாவர்களுடன் இவர்களும் சேர்ந்து, தக்க தருணத்தில் கலகம் விளைத்திருந்தால், நாஜிப் படைகளை விரட்டி[ய]டித்திருக்கக் கூடும். நாடு பிடிக்க வேண்டு மென்னும் பேராசை அவர்கள் கண்களை மறைத்தது. அதனால் தான் யூகோஸ்லாவியர்களுடன் அவர்கள் சேர வில்லை. "பேராசை பெரு நஷ்டம்" என்னும் பழமொழிக்கு இவர்கள் இலக்கானார்கள்.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

பின்லாந்து சமரசப் பேச்சும் சுவீடன் கவலையும்.

ஐரோப்பாவின் கண்க ளெல்லாம் பின்லாந்தின் மீதே பதிந்திருக்கின்றன. குறிப்பாக ஹிட்லரின் கையாட்கள் போன்ற ஹங்கேரி, பல்கேரியா, ருமேனியா ஆகிய நாடுகள் மிகவும் அக்கரை கொண்டிருக்கின்றன. பின்லாந்திற்கும் ரஷ்யாவிற்கும் நடை பெற்றுக் கொண்டிருக்கும் சமரசப் பேச்சுக்கள் எப்படி முடி வடைகின்றன வென்று மிகுந்த ஆவலோடு கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பேச்சுக்களைக் குறித்து பத்திரிகைகள் பல பலவாறு எழுதிக் கொண்டிருந்தன. ரஷ்யர்கள் விதித்த நிபந்தனைகளை பின்லாந்து நிராகரித்து விட்டது என்று சொல்லப்பட்டது. "மார்கான்-டிட்னிங்கென்" என்னும் பத்திரிகையில் ஹெல்சிங்கி நிருபர் இது பற்றி எழுதியதாவது:—

"சமரசத்தைத் தாம் கோருவதாக பின்லாந்து வெளியிட்டு விட்டது. ஆனால், அதே சமயத்தில், ரஷ்யர்கள் விதித்துள்ள நிபந்தனைகளைத் தான் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்றும் கூறியிருக்கிறது. இந்த விடை, ரஷ்யர்களுக்குக் கிடைத்த வுடனே, அவர்கள் என்ன செய்வார்கள் என்பது பற்றித் தான் முக்கியமாகப் பேசப்பட்டு வருகிறது."

ரஷ்யாவோடு விரைவில் பின்லாந்து சமாதானம் செய்து கொள்ள வேண்டுமென்பது பற்றி, ஸ்வீடிஷ் பத்திரிகைகள் பெரிதும் அக்கரை கொண்டிருக்கின்றன. ரஷ்யாவோடு ஒப்பந்தம் செய்து கொள்ள ஒட்டாதபடி பின்லாந்தைத் தடுக்கக் கூடிய கோஷ்டி யொன்று, அங்கே பலமாக இருக்கிறது என்று அவை கருதுகின்றன. ஸ்வீடனிலுள்ள பொது வுடமைக் கட்சிப் பத்திரிகையான "மிட் டாக்" கீழ்க் கண்டவாறு எழுதுகிறது:—

"நிலைமை சிக்கலா யிருக்கிறதென்று நமக்குத் தெரியும். ஆனால், சமாதானம் ஏற்பட தாமதமாகும் ஒவ்வொரு நாளும் நிலைமையை இன்னும் பத்துப் பத்து மடங்கு சிக்கலாக்கும். சோவியத் நிபந்தனைகளை பின்லாந்து ஒப்புக் கொள்ளுவதனால், பின்லாந்து மக்களுக்கும் நன்மை; ஸ்வீடனுக்குள்ள கவலையும் நீங்கிவிடும். அதனால், போத்னியா வளைகுடாவில் யுத்தம் நேரும் என்ற பயத்தைப் போக்கி விடும். லாப்லாந்தி லிருந்து 2 லட்சம் பேர்கள் ஸ்வீடனில் வந்து குடியேற வேண்டிய நிர்ப்பந்த மில்லாது போய் விடும். ரஷ்யாவின் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள பின்லந்து மறுத்து, இராணுவப் போக்கின்படி அனைத்தும் நடைபெறுமானால், முற் கூறிய துன்பங்க ளெல்லாம் சம்பவிக்கும்."

இது பற்றி ஸ்வீடனில் வேறு முறையில் என்ன நினைக்கிறார்கள் என்பதைக் குறித்து, ஸ்டாக்ஹோமிலிருந்து வெளி வரும் "ஆப்டன் டிட்னிங்கேன்" என்னும் பத்திரிகை குறிப்பிடுகிறது. பால்டிக் நாடுகளில் நிலைமை வெகுவாக மாறிக் கொண்டிருப்பது பற்றி கூறிவிட்டு, ஜெர்மானியர்கள் ஸ்வீடனைச் சுற்றி வலைய மிட்டுக் கொண்டிருப்பதாகவும், இந்த வலையம் நொறுங்க வேண்டுமானால், பின்லாந்து ரஷ்யாவோடு சமரசமாகி லுதுவேனியா, எஸ்டோனியா, லட்வியா ஆகிய நாடுகளை ரஷ்யா கைப் பற்றிக் கொள்ள வேண்டு மென்றும் கூறியிருந்தது. அப்போது ஜெர்மன் கப்பல்களைத் தாக்கக் கூடிய நிலைமையில் ரஷ்யர்கள் இருப்பார்கள். மேலும் அப்பத்திரிகை கூறியதாவது:—

"யுத்தம் முடிந்த பிறகு, பால்டிக் நாடுகளில் சோவியத் யூனியன் தான்

ஆதிக்கம் மிகுந்ததா யிருக்கும்; ஜெர்மன அரசாங்கம் குலைந்து விடும்...... ....கிழக்கே யுள்ள விமானப் பாதையும் கடற் பாதையும் (பால்டிக் கடலைக் கடந்து செல்லுவது) சமீபத்தில் பயன் படக் கூடியவையானால், ஸ்வீடனில் செய்யப்படும் பொருட்கள், ரஷ்யாவுக்குக் காலாகாலத்தில் வந்து சேர முடியும்.''

வட பின்லாந்தில் ஜெர்மன் படைகள், ஜெனரல் டீட்டில் என்ன செய்வார்?

ஜெர்மன் ஜெனரலான டீட்டில் தன் 7 படைகளுடன் பின்லாந்திலிருக்கிறார். இது பற்றித் தான் பின்லாந்து கலக்க மடைகிறது. இந்தப் படைகள் அங்கில்லாதிருந்தால், பல மாதங்களுக்கு முன்னேயே நேச நாடுகளுடன் பின்லாந்து சமரசம் செய்து கொண்டிருக்கும். இப்போது, அங்குள்ள நிலைமையாவது: சோவியத சமரச நிபந்தனைகளை பின்லாந்து ஒப்புக் கொள்ளுவதா யிருந்தால், அந்த ஜெர்மன் படைகளை அடைத்து வைக்க வேண்டும்; அல்லது, அந்த வேலையைச் செய்யும்படி சோவியத் படைகளை யனுமதிக்க வேண்டும். அப்போது ஜெர்மன் படைகள் போராடும்படி நேரிட்டால், ரஷ்யா-ஜெர்மன் போர்க்களமாக பின்லாந்து மாறிவிடும். சோவியத் படைகள் விரைவாக முன்னேறி எஸ்டோனியாவிற்குள் நுழைந்து விடுவார்களானால், ஜெர்மனிக்கும் பின்லாந்துக்கும் உள்ள போக்கு வரவுப் பாதைகள் பெரும் ஆபத்திற் குள்ளாக நேரும். அப்போது ஜெனரல் டீட்டில் தன் படைகளை பின் வாங்கிக் கொண்டு போக நேரும். இப்படிப் பட்ட சந்தர்ப்பத்தை பின்லாந்து அரசாங்க வட்டாரங்கள் எதிர் பார்த்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இப்படி நேருமானால், இந்தப் பிரச்சினை தீர்ந்து விடும்.

அப்படியானால், ஜெனரல் டீட்டில் என்ன செய்வார் என்று எதிர் பார்ப்பது பொருத்தமாகும். அவர் வட நார்வேயிலுள்ள மோட்டார் ரோடுகள் வழியாக, வாபீசாகலாம். ஆனால், அங்கே கௌரவம் குறுக்கிடுகிறது. எப்படியிட்டாவது போராடிக் கொண்டு தான் இருக்க வேண்டுமே யொழிய, கேவலமான முறையில் மகா கஷ்டங்களுக் குள்ளாகிப் பின் வாங்கலாகாது என்று தான், ஹிட்லர் கட்டளையிடுவார் என்று தான் எதிர் பார்க்க வேண்டும். கிர்கெனெசி லிருந்து தெற்கு நோக்கித் தன் படைகளை அவர் நடத்திக் கொண்டு போகலா மென்றால், தவிர்க்க முடியாத பெருங் கஷ்ட மொன்று குறுக்கிடுகிறது. அதாவது தெற்கே யுள்ளது மகா கஷ்டமான இடம்; பரந்த சதுப்பு நிலப் பெரு வெளி. இதைக் கடப்பது மகா கஷ்டம்.

ஜெனரல் டீட்டில் பின் வாங்குவதற்கு மற்றொரு வழி யிருக்கிறது. தெற்கே, போத்னியா வளைகுடாவிலுள்ள ஓஸ்லோ என்னு மிடத்தில் ஏற்கெனவே இவருக்கு ஒரு தள மிருக்கிறது. அங்கே அவர் பின் வாங்கிக் கொள்ளலாம். சமரசப் பேச்சுக்கள் நடந்து கொண்டிருக்கும் போதே, அவர் பின் வாங்கிக் கொண்டிருக்கவும் கூடும். இப்படிச் செய்வதனால், அவசியம் நேரும் போது, கடந்து செல்ல முடியாததோர் நிலைமை ஏற்படாதபடி, தவிர்ப்பார். விரைவில் கப்பல் ஏறுவதற்கும் வசதியா யிருக்கும்.

பால்டிக் படைத் தலைமை: நேச நாடுகளின் ஒத்துழைப்பு.

இது பற்றி ஸ்வீடனிலிருந்து வெளிவரும் ஒரு பத்திரிகையின் நிருபர் எழுதி யிருப்பது இங்கே குறிப்பிடத் தக்கது:

"'பிஷர்மான்ஸ்' தீபகற்பம், மர்மான்ஸ்க் முதலிய தீங்கனி போன்ற நாடுகள் எளிதில் கிடைக்கத் தக்க நிலையிலிருக்க, ஜெர்மானியர்கள் பிரமாதமாகப் போராடிக் கொண்டிருக்கக் காரணம் என்ன வென்று சென்ற வருஷம் வசந்த காலத்தில் பத்திரிகா நிருபர்கள் ஜெனரல் டீட்டிலைக் கேட்ட போது, மறு மொழி கூறாது மௌனம் சாதித்தார். தம் போக்குவரத்திற் குள்ள நெடுந்தூரமும், ரஷ்யர்கள் அமைத்துள்ள பலமான பாதுகாப்பு அரண்களுந் தான் இதற்குக் காரணம் போலும். இந்த ஜெர்மன் படைகளுக்கு 'சப்ளை'கள் வர ஒட்டாதபடி வழியில் வெட்டி விட்டால், இதன் போக்கு வெகு விரைவாக மாறி விடும். இப்போது டீட்டில் வசம் இரண்டு மாதங்களுக்கு வேண்டிய சப்ளைகள் இருப்பு இருக்கின்றன. . இந்த இரண்டு மாத காலத்திற்குள் எத்தனையோ காரியங்கள் நிகழ்ந்து விடக் கூடும். வந்தது வரட்டு மென்று, மர்மான்ஸ்குக்கு அவர் முன்னேறிப் போகவுங் கூடும்.''

கடுமையாகப் போராடாமல் ஜெர்மானியர்கள் ஏன் பின்லாந்தை விட்டு விட மாட்டார்கள் என்பதற்கு, "ஸ்டாக் ஹெல்லர் டாப்க்லெட்'' என்னும் பத்திரிகை காரணங் கூறுகிறது. ஜெர்மன் யுத்த உற்பத்திக்கு மிகவும் இன்றியமையாதவை, 'பிட்சமோ நிக்கல் யூனிட்ஸ்'. பின்லாந்தின் கடற் கரையை ஜெர்மனி இழந்து விட்டால், பால்டிக் கடலில் தமக்குள்ள கேந்திர ஸ்தானங்களை இழந்தது போலத் தான். நார்வேயும் அப்போது "கலகலத்து விடும்''.

பால்டிக் கடலில் ஜெர்மனிக்கு உள்ள ஆதிக்கம் ரஷ்யாவுக்கு மாறுமானால், ஐரோப்பாவின் அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் மகத்தான மாறுதல்களுக்கு இடமேற்பட்டு விடும். அதனால் தான் பின்லாந்தை எவ்வளவு காலம் விடாதபடி பிடித்திருக்கக் கூடுமோ அவ்வளவு காலம் வரை வைத்திருக்க வேண்டு மென்று ஜெர்மானியர்கள் முயற்சிக்கிறார்கள். இந்த இத்தாலியில் யுத்தத்தை நிறுத்தும் பொருட்டு சமரசப் பேச்சுக்கள் நடத்தும் போது, நேச நாடுகள் எவ்வளவு ஒற்றுமையோ டிருந்தனவோ, அதே போல ஒற்றுமையோடு தான், இப்போதும் அதாவது பின்லாந்து சமரசப் பேச்சுகள் நடைபெறும் போதுமிருக்கின்றன. இத்தாலியோடு சமரசம் பேசும் பொருட்டு நிபந்தனைகளை வகுத்தது பிரிட்டிஷாரும் அமெரிக்கருமானாலும், முதலில் சோவியத் அரசாங்கத்தையும் கலந்து கொண்டு அவர்களுடைய அங்கீகாரத்தையும் பெற்றார்கள். அதே போலவே, போலந்து அரசாங்கத்திற்கு, சோவியத் அரசாங்கம் விதித்துள்ள நிபந்தனைகளை யனுப்பும் முன்பு, பிரிட்டிஷ் அரசாங்கம் அதை அங்கீகரித்தது. அமெரிக்காவின் அங்கீகாரம் கோரப்படவில்லை; ஏனென்றால், பின்லாந்தும் அமெரிக்காவும் இப்போது போராடிக் கொண்டிருக்க வில்லை. ரஷ்யாவோடு சமரசம் செய்து கொள்ளும் முயற்சி பலிக்காமற் போகுமானால், பின்லாந்துக்கும் அமெரிக்காவுக்கும் உள்ள அரசியல் தொடர்புகள் அற்று விடக் கூடுமா என்பது பற்றி, ஸ்வீடனிலுள்ள ஒரு முக்கியமான பத்திரிகை விவாதித் திருக்கிறது.

ரஷ்ய சமாதான நிபந்தனைகளை பின்லாந்து அரசாங்கம் நிராகரித்து விட்டது இது மிகவும் வருந்தத் தக்கதே. பின்லாந்து தலைவர்கள் மகா தந்திரமாகவும் ஆபத்துக் குள்ளாகும் முறையிலும் போய்க் கொண்டிருக்கிறார்கள். பின்லாந்தின் எதிர் கால வாழ்வைக் கொண்டு பணய மாடுகிறார்கள். இப்படி நிராகரிப்பதனால், அவர்கள் அடையத் தக்க லாபம் எதுவு மில்லை; நஷ்டத்திற்குத் தான் உள்ளாவார்கள். ஏனென்றால், ரஷ்யா பொறுமை யிழந்து தன் நிபந்தனைகளை வாபீசு பெற்றுக் கொள்ளவுங் கூடும். அப்படியானால் செம்படைகள் விரைந்து வந்து பின்லாந்தைத் தாக்கி சரணடையச் செய்து விடும்; அல்லது தான் பால்டிக் நாடுகளில் ஆதிக்கம் பெறுகிற வரைக்கும், பின்லாந்தை அதன் இஷ்டம் போல நடந்து கொள்ளும்படி விட்டுவிடவும் கூடும். இதற்கு, ரஷ்யா, பெய்பஸ் ஏரிக்குத் தெற்கேயும் வடக்கேயும் தாக்குதல் போராட்டத்தைப் பெருக்க வேண்டும்.

செஞ்சிலுவைப் பிரசார ஒலிபரப்பு.

1944-ம் வரு மார்ச்சு மீ 28உ செவ்வாய்க்கிழமை மாலை 7-45 மணிக்கு செஞ்சிலுவைப் பிரசாரப் பிரசங்கம் ஒலி பரப்பப்படும்.

தலை வணங்குகிறவரை ஜப்பானை நொறுக்கவேண்டும்

இந்தியா ஒரு பாய்ச்சல் தளம்

(கடுமையாக உழையுங்கள்)

சென்னை வானொலி நிலையத்திலிருந்து மார்ச்சு மாதம் 14-ம் தேதி காப்டன் ஜி. டி. பி. ஹார்வி அவர்கள் ஒலி பரப்பிய பிரசங்கத்தின் மொழி பெயர்ப்பு.



காப்டன் ஜி. டி. பி. ஹார்வி,

இங்கிலாந்திலிருந்து வந்த தோர் சொந்தக் கடிதத்தில் ஒரு நிகழ்ச்சியைப் பற்றி குறிப்பிட்டிருந்தது: ஒரு வெடி மருந்துத் தொழிற்சாலைத் தொழிலாளி. நாள் தோறும் அவர் காலை 6-30 மணிக்கு வேலைக்கு வரவேண்டும். ஒரு நாள் 6-40 மணிக்கு வந்தார். அவர் குறிப்பிட்ட நேரத்திற்கு வரவில்லையாகையால், தொழில் தலைவர், தன் பதிவுப் புத்தகத்தில் குறித்துக் கொண்டார்.

தலைவர் :—நீ ஏன் கால தாமதமாய் வந்தாய் ?

தொழிலாளி :—தயவு செய்து மன்னியுங்கள் ; உண்மை என்னவென்றால், என் மகனை (குழந்தை) அவனுடைய பாட்டியாரிடம் ஒப்புவிக்க வேண்டியிருந்தது.

தலைவர் :—பாட்டியாரிடமா ? ஏன் ? உனக்கு மனைவியில்லையா ?

தொழிலாளி :—உண்டு. ஆனால், காலை 6-மணிக்கெல்லாம் அவள் ஆஸ்டின் தொழிற்சாலையில் வேலைக்குத் தயாராயிருக்க வேண்டும். ஆகையால் தான் அவளுடைய தாயார் குழந்தையை ஒப்புக் கொள்ள வேண்டுமென்று ஏற்பாடு செய்து விட்டோம்.

தலைவர் :—உன் மனைவிக்கு 6-மணிக்கெல்லாம் வேலை, உனக்கு 6-30 மணிக்கெல்லாம் வேலை. இது தான் உனக்குத் தெரியுமே! அதற்கு முன்னதாகவே, அந்தப் பாட்டியாரிடத்தில் குழந்தையை ஒப்புவித்து விட ஏன் ஏற்பாடு செய்திருக்கக் கூடாது ?

தொழிலாளி :—ஏனென்றால், என் மாமியாருக்கு இரவு வேலை, காலை 6-30 மணிக்குத் தான் அவர் வேலையினின்று திரும்புகிறார்.

பரிபூரண யுத்த முயற்சி

இந்தக் காதையைக் கொண்டு என் பிரசங்கத்தை ஆரம்பிக்கிறேன். ஏனென்றால, பரிபூரண யுத்த முயற்சிக்கு இது ஒரு எடுத்துக் காட்டாக விருக்கிறது. இந்த சாதாரண குடும்பத்தைப் போல, கோடிக் கணக்கான குடும்பங்கள் இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலுமிருக்கின்றன. எதிரியின் மகா கடுமையான தாக்குதல்களையெல்லாம் சமாளித்துக் கொண்டார்கள. நாஜிக் கொள்கை அடியோடு அழிவதும், நேசக் கட்சியினர் வெற்றி பெறுவதும் முற்றும் உண்மை என்றாலும், அந்தக் குடும்பம், அது போன்ற கோடிக் கணக்கான குடும்பங்கள், சென்ற 4 வருஷங்களுக்கு முன்பு எவ்வளவு கஷ்டப்பட்டு வேலை செய்து வந்தார்களோ அது போலவே தான் இப்போதும் தம் முழு பலத்தையும் அறிவையுங் கொண்டு உழைத்துக் கொண்டு வருகிறார்கள். அன்றியும் யுத்த காலத்தில், வாழ்க்கை வசதிகளையும் இன்பங்களையும் சௌகரியங்களையும் கூட அவர்கள் விரும்புவதில்லை.

இங்கே தந்தியில்லாக் கம்பிச் செய்திகளைக் கேட்கிறோம். பத்திரிகைகளைப் படிக்கிறோம். படங்களைப் பார்க்கிறோம். நமது நண்பர்கள், உறவினர், நேச நாட்டினர் ஆகியவர்களின் மன உறுதியையும் வீரத்தையும் தியாகததையும் பாராட்டுகிறோம். ஆனால், நாமும் யுத்தத்தில் ஈடு பட்டிருக்கிறோம் என்னும் உண்மையை உணர்ந்து கொண்டவாகள் நம்முள் எத்தனைப் பேர் ? இந்த யுததத்தில இப்போது தான இந்தியா ஈடுபட ஆரம்பித்திருக்கிறது. இதன் மூலம் எனது சொந்தக் கருத்தைத் தான் வெளியிடுகிறேன்.

மக்கள் படும் அல்லல்கள்

சிலர் மகா கடுமையாக வேலை செய்ய வேண்டியிருக்கிறதென்பது உண்மை தான். மற்றும் பலர், யுத்த நிதிக்குப் பெருவாரியாகக் கொடுத்தார்கள். முணுமுணுக்காது விசேஷ வருமான வரியைக் கட்டினார்கள் ; சம்பளம் வாங்காதபடி கௌரவ வேலைகளைச் செய்தார்கள். அன்றியும், இந்த உலக யுத்தத்தின் பயனாக, ஏற்படும் உணவுப் பஞ்சம், விறகுப் பஞ்சம் முதலிய பல வகைப் பொருட்களுக்கும் பஞ்சம் ஏற்பட்டு விட்டபடியால், கோடிக் கணக்கான மக்கள் கொடுந் துன்பத்திற் காளாகியிருக்கிறார்கள். போக்குவரவு சாதனங்களோ, பெரிதும் தடைப்பட்டும் வசதிக் குறைவாகவும் இருக்கின்றன. போதாக் குறைக்கு, பூரணமாக யுத்த வேலையில் ஈடுபட்டுப் போர் முனையில் சேவகம் செய்து வரும் தம் மக்களைப் பற்றியும் சகோதரர்களைப் பற்றியும் அவர்கள் கவலை கொள்ளுகிறார்கள். இப்போது ஐரோப்பாவில் நடைபெறும் பயங்கரமான கடும் போரைப் போன்ற மற்றொரு போருக்கு, நாம் உள்ளாக வேண்டுமென்று இந் நாட்டு மக்கள் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். முன்னே கூறப்பட்ட அந்த இங்கிலீஷ் தொழிலாளியைப் போல, இங்குள்ள சாமான்யமான ஒவ்வொருவரும் நினைத்தாலல்லது, இந்தப் போராட்டம் ஒருக்கால் வருஷக் கணக்காக நடைபெறவுங் கூடும். இத்துடன் இது முடிவடையவில்லை. ஏனென்றால், நாம் திருப்தியடையத்தக்கபடி ஜப்பானியப் போராட்டம் முடிவடைய வேண்டும் ; அந் நாட்டவரை அழிக்க வேண்டும். பாதுகாப்பும் மகிழ்ச்சிக்குமுரிய முன்னேற்றம் ஏற்படவேண்டிய இடத்தில், குழப்பமும் துன்பமும் தலைகாட்டாதிருக்க வேண்டுமானால், ஜப்பானியப் போராட்டத்தின் பயனாகவும் ஜப்பானியர் அழிவின் பயனாகவும் இந் நாட்டில் அமைதியாக உண்டாக்க கூடிய அரசியல் நிலை பற்றியும் பொருளாதார நிலை பற்றியும் சமாதானம் ஏற்படுவதனால் என்ன நேரக் கூடுமெனபதையும் பற்றி, தெரிந்து, ஆராய்ச்சி செய்து அவற்றின்படி நிறை வேற்ற வேண்டும்.

என் உள்ளத்தில் ஒலிப்பது என்ன ?

நான் பலிதமில்லாத சோதிடனல்ல. சிறகொடிந்த பறவை போல் மடியவும் நான் விரும்ப மாட்டேன். ஆனால் என் உள்ளத்தில் ஒன்று ஒலித்துக் கொண்டிருக்கிறது. பரிபூரணமாக யுத்த முயற்சியில் நாம் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என்று ஞாபகப்படுத்த வேண்டிய அவசியம் அவ்வப்போது நேருகிறது. நான் இப்படிச் சொல்லுவதற்குக் காரணங்களாவன :—முதல் காரணம் : வசதிக் குறைவு, கடும் உழைப்பு, பசி, வறுமை உறவினர்

மரணம், நஷ்டம் முதலியவை யுத்தத்தினால் ஏற்படுபவை. இவற்றை நாம் ஏற்கெனவே அனுபவித்திருக்கிறோம்.

கடும் அனுபவங்கள் நேரலாம்

இன்னும் கடுமையான தோர் அனுபவங்களுக்கு நாம் உள்ளாக வேண்டி வரும். இதைத் தடுக்க வேண்டுமானால், நாம் நம்மைப் பலப் படுத்திக் கொள்ள வேண்டும். ஐரோப்பிய யுத்தத்தின் இரத்தக் களரியையும் நாச வேலையும் உச்ச நிலையை யடைந்து கொண்டிருக்கின்றன. ஆனால், கிழக்கத்தி எதிரியோடு போராட இப்போது தான் ஆரம்பித் திருக்கிறோம். அவன் துரோகத் தனமாகப் பாய்ந்து ஏறக் குறைய இரண்டு ஆண்டுகளாகின்றன. அதன் பயனாக, நமக்கு மனக் கசப்பும் அவனுக்கு ஊக்கமும் ஏற்பட்டது. பர்மா, சயாம், இந்தோ சீனா அவற்றிற்குத் தெற்கே யுள்ள பல பெருந் தீவுகள் ஆகியவை இன்னும் அவன் தயவை எதிர் பார்த்துக் கொண்டு தான் இருக்கின்றன. அமெரிக்கர்களிட மிருந்தும் நம்மிட மிருந்தும் அநேகக் கப்பற் படைக் கேந்திர ஸ்தானங்களையும் விமானக் கேந்திர ஸ்தானங்களையும் திருடிக் கொண்டான். இப்போது அவற்றை ஒவ்வொன்றாக இழந்து கொண்டு வருகிறான். அவனிடம் படைகள் அதிகம். அவனுக்கு பெரிய கப்பற் படையில், பெரும் பகுதி யிருக்கிறது. அந் நாட்டு மக்கள் உயர்ந்த முறையில் பயிற்றுவிக்கப்பட்டு, பெரும் யுத்த மனத்தினரா யிருக்கிறார்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், அவன் ஒரு கெட்ட விரோதி என்று தான் சொல்ல வேண்டும். நாகரிக உலகத்தின் ஒரு பகுதியா யிருக்கும் இவன், மிகவும் கெட்டவன். இவன் எந்த அளவிற்குக் கெட்டவனென்றால், மக்கள் வாழ்க்கை விதிகளுக்கு அவன் தலை வணங்குகிற வரை அவனை அடித்து நொறுக்கிக் கொண்டே யிருந்தாலல்லது, உலக முழுவது மில்லா விட்டாலும் கிழக்குப் பாதியிலுள்ள நாடுகளாவது சமாதானத் தோடும் அச்சமின்றியும் வாழக் கூடு மென்று எண்ண இடமே யில்லை.

4½ வருஷ முயற்சி

ஜெர்மனி, இத்தாலி, பல்கேரியா, ருமேனியா ஆகிய நாடுகளைச் சமாளிக்க 4½ வருஷகாலம் மகா கடுமையாக ஒன்றுபட்டு முயற்சிக்க வேண்டியிருந்தது. இது, அந்நாடுகள் அடைய வேண்டிய படிப்பினையில் ஒரு பகுதி தான்! ஆகவே ஜப்பானியர்களை வெல்வதற்கு ஏன் இன்னும் அதிகக் காலம் பிடிக்காது. நேச நாடுகளுக்கும் ஜப்பானுக்கும் வெகுதூரமிருக்கிறது. ஆகவே, பழி வாங்க நினைக்கும் நேச நாடுகள் இலகுவில் தாக்க முடிவதில்லை.

இந்தியா ஒரு பாய்ச்சல் தளம்

ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் உள்ள தூரத்தை விடவும், ஜப்பானுக்கும் இங்கிலாந்துக்கும் உள்ள தூரத்தை விடவும் மிகவும் அருகில், அநேக பெரிய தளங்களை ஏற்படுத்த வேண்டி யிருக்கிறது. இந்தத் தளங்களில் இந்தியாவும் முக்கியமானதோர் தளமாக அமையலாம். இப்போதுள்ள பல காரணகாரியங்களைக் கொண்டு பார்த்தால் அப்படித் தான் தோன்றுகிறது. தென் கிழக்காசியப் போர்த் தலைமைக் காரியாலயம் ஏற்கெனவே வேலை செய்ய ஆரம்பித்து விட்டது. மகத்தான முயற்சியின் பயனாக ஏற்படப் போகும் போராட்டத்தில் இந்தியாவிலிருந்து தான் பல வகைப் படைகளும் தளவாடங்களும் அனுப்பப்படப் போகின்றன. நமது எதிரியோ, நாகரிக உலகம் எதிர்த்துப் போராட வேண்டியவனே; மகா கொடியவன்; ஆதிக்கம் மிகுந்தவன். இதனால், ஆயுதங்களை எடுத்துப் போராடாத நமகக்கு என்ன ஏற்படும் என்று சற்று நினைத்துப் பாருங்கள். கோடிக் கணக்கான மக்களும் மோட்டார் வண்டிகளும் டிப்போவிலிருந்து வெளியேயும், வெளியேயிருந்து டிப்போவுக்குள்ளும் போய் வந்து கொண்டிருக்கும். ஆயிரக் கணக்கான ரயில் வண்டித் தொடர்கள் நிறைய படைகளும் தளவாடங்களும் சதா போய்க் கொண்டேயிருக்கின்றன. நூற்றுக் கணக்கான விமானக் கூடங்களிலிருந்து ஆயிரக் கணக்கான சிறிய விமானங்களும் பெரிய விமானங்களும் கிளம்பிப் போய்க் கொண்டிருக்கின்றன. ஆயிரக் கணக்கான கப்பல்கள் இந் நாட்டிலுள்ள துறை முகங்களுக்கு வந்து போய்க் கொண்டிருக்கின்றன. இவை எல்லாம் சேர்ந்து தான் இது ஒரு பாய்ச்சல் தளமாக அமைகிறது. இங்கிருந்து தான் எதிரியின் குரல்வளை மீது நேச நாடுகள் பாயப் போகின்றன. இந்தக் காட்சி, ஆதிக்கத்தைக் குறிப்பிடவல்லது. இதனால் மனதுக்கு ஆறுதல் உண்டு. இதனால் நேரும் பலா பலன்களைக் குறித்து, நம் நாட்டின் ஒரு பகுதியாராவது, இன்னும் உணர்ந்து கொள்ள வேண்டி யிருக்கிறது.

சும்மா உட்கார்ந்திருப்பீர்களா ?

நான் ஒரு பயங்கரவாதியல்ல. கடைசியாக, ஜப்பானியர்களின் பலம் கடலிலும் தரையிலும், ஆகாயத்திலும் எந்த அளவிற்கு இருக்கிற தென்று நாம் நிச்சயமாகத் தெரிந்து கொண்டிருக்கிறோம். இளகிய மனமுடையவர்களுக்கு ஒரு கேள்வி. நீங்கள் ஜப்பானியப் படைத் தலைமைக் காரியாலத்தைச் சேர்ந்திருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய தீவகத்தை எதிரிகள் திரண்டு வந்து தாக்கப் போகிறார்கள் என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். அலூஷியன் தீவுகளிலிருந்தும் கிஸ்கா தீவுகளிலிருந்தும் தெற்கு நோக்கியும், சாலமன்ஸ், மார்ஷல்ஸ், ட்ரக் தீவுகளிலிருந்து வடக்கு நோக்கியும், 'கொரமாண்டல்' கரையிலிருந்தும் கர்னாடிக் கடற் கரையிலிருந்தும், நேச நாட்டுப் படைகளின் பலம் ஓங்கிக் கொண்டிருந்தால், நீங்கள் என்ன செய்வீர்கள் ? உங்கள் உள் அரண்களை எதிரிகள் தடையின்றித் தாக்கும்படி விட்டு விட்டு கையைக் கட்டிக் கொண்டு சும்மா உட்கார்ந்திருப்பீர்களா ? அல்லது, கிளம்பிப் போய், அவர்களது திட்டம் நிறைவேற ஒட்டாதபடி, அவர்கள் திரண்டுள்ள தளங்களை யெல்லாம் நாசப் படுத்துவீர்களா ? இது பற்றி நீங்கள் நன்கு ஆலோசிப்பீர்களானால், இந்தியாவுக்கே, இந்த நகரத்திற்குக் கூட, ஒருக்கால் யுத்தம் வாராதிருக்கலாம். விஷயம் என்னவென்றால், திருகு முக்காடிக் கொண்டிருக்கும் எதிரிக்கு, இந்தியாவின் கீழ் பாகம் தாக்கத் தகுந்த இடமாகக் காட்சியளிக்கும். அங்குள்ளவர்கள் பெரும்பாலும் விஷய ஞான மில்லாதவர்கள். நிலையற்ற தன்மை யுடையவர்கள். இவர்களைக் காப்பாற்ற வேண்டும். இவர்கள் பீதி கொள்ளாதபடி தடுக்க வேண்டும். யுத்த வேலைகளை அவர்கள் தடை படுத்தாதபடி கவனித்துக் கொள்ள வேண்டும்.

போர் முனையின் நோக்கம் தேசியம்

ஆகவே, அறிவு படைத்த ஒவ்வொருவரும், இந்த வேலையைச் செய்ய கங்கணங் கட்டிக் கொள்ள வேண்டும். இதுவே தான் தேசீயப் போர் முனையின் முக்கியமான நோக்கம். அதாவது, விஷய ஞான மில்லாதவர்களுக்கும், இது பற்றி அருவருப்புள்ளவர்களுக்கும், தோல்வி மனப்பான்மை யுள்ளவர்களுக்கும் ஊக்கமுண்டாக்கி, உண்மை விவரங்களை யறிவித்து, உணர்ச்சி பெறச் செய்யவேண்டும். இந்நாட்டில் சாதாரண நிலையிலுள்ள ஆண்களின் மனோ நிலையும் பெண்களின் மனோ நிலையும் சிதறாதிருக்கும் பொருட்டு, கையாளத் தக்க டஜன் கணக்கான முறைகளும் உண்டு. தனிப்பட்டவர்கள் தியாகம் செய்யலாம்; கடுமையான விவாதங்களை மேற் கொள்ளலாம். உள்ள பணத்தைச் செலவழிக்கும் தன்மையை விட்டு, மிச்சப்படுத்தலாம்: இது பற்றி பிரசாரம் செய்யலாம். விலை வாசிகள் உயர ஒட்டாமல் தடுப்பதற்கு உதவலாம். படைகளுக்காக தீவிரமாகவும் முறைப்படியும் வேலை செய்யலாம். உதாரணமாக செஞ்சிலுவையார் செய்யும் முதலுதவிக் கோஷ்டி, பராமரித்தல் (நர்சிங்) முதலிய பல வகைத் தொண்டுகளைச் சிப்பாய்களின் குடும்பங்களுக்குச் செய்யலாம். அல்லது தேசீயப் போர்முனை வேலைக்கு உதவியாக, யுத்த சம்பந்தமாகக் குழம்பிப் போயும் கவலையில் மூழ்கியும் இருக்கும் பொது மக்களிடம் சென்று, நேச நாட்டினர் இவ்வளவு மன உறுதியோடிருப்பதற்கு

ஹிட்லரும் முஸோவும் பேனா ஸ்டாண்டுகள்

ஹிட்லர் பொம்மையையும் முசோலினி பொம்மையையும் கொண்ட பேனா ஸ்டாண்டுகள் செங்கற்பட்டு உயர்தரக் கலாசாலையில் செய்யப்படுகின்றன. ஜதை ரூ. 1. தனி அணா 8.

வேண்டியவர்கள் கீழ்க்கண்ட விடத்தில் வாங்கிக் கொள்ளலாம் :—

செங்கற்பட்டு, செண்ட் ஜோசப்ஸ் உயர்தரக் கலாசாலைத்
தலைவரும் நிருபரும்.

ஆதார மென்னவென்று விளக்கிக் கூறி, எவ்வளவு கஷ்டங்களுக்கு உள்ளாக வேண்டிய அவசியம் ஏற்படலாமென்றும், இடைவிடாது முயற்சிக்க வேண்டியது எவ்வளவு அவசியமென்றும், அரசாங்கத்தார் விதிக்கும் பல வகைக் கட்டுப்பாடுகளுக்கும் மகிழ்ச்சியோடு உள்ளாக வேண்டுமென்றும், நமது போர்த் தலைவரிடம் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டியது அவசியமென்றும், எடுத்துச் சொல்லலாம்.

பிறர் பின்பற்றும் முறையில், நடக்க வேண்டும்

இவை உங்கள் மனதிற்குத் தெளிவுபடாதிருக்கலாம். ஆனால், நீங்கள் மிச்சப்படுத்தும் தொகையோ, நீங்கள் செய்யும் பிரசங்கங்களோ, நீங்கள் எத்தனை மேஜைகளைப் பின்னுகிறீர்களோ, அவையெல்லாம் முக்கியமான அம்சங்களல்ல. தாமே இம் முறைகளைப் பின்பற்றினால் தான், பிறரையும் இம்முறைகளை மேற்கொள்ளும்படிச் செய்யக் கூடும். ஆண்களும் பெண்களும் பிடிவாதத்தோடு, சம்பளத்தை எதிர்பார்க்காமல், தம் சொந்தச் செலவிலேயே, எவ்வித பிரதிப் பிரயோஜனத்தையும் கருதாமல் எந்த வகை யுத்த வேலையானாலும் எந்த அளவிற்குச் செய்கிறார்களோ, இந்த அளவிற்கு நம் நாட்டிற்கு நேர்ந்திருக்கக் கூடிய நெருக்கடியை அவர்கள் உணருகிறார்கள் என்று அர்த்தம். நாடு முழுதும் இதை உணர வேண்டும்; அதாவது, பிறர் பின்பற்றத்தக்க முறையில் நடந்து வருவது தான், எல்லா வகைகளிலும் மகா முக்கியமானது என்றும், வெற்றி தர வல்ல மனோ தைரியமும் உறுதியும் அதனால் ஏற்படுமென்றும், பொது மக்கள் உணர வேண்டும்.

இந்த பிரசங்கத்தின் தலைப்பு 'கடுமையாக உழையுங்கள்' என்பது. இப்படி நான் கூறுவது சில விஷயங்களில் மட்டும் பொருந்தாது என்று எச்சரிக்க விரும்புகிறேன். எதிராளிகளின் கடமை எதிர்ப்பு வேலை தான் என்னும் கொள்கையில் இந் நாடு மூழ்கியிருக்கிறது. யுத்தத்தில் இந்தக் கொள்கை தான் சரி என்று நான் கருதவில்லை. திருத்திக் கொள்ள உதவும் முறையில் அரசியல் குறைகளை எடுத்துக் கூறுவது, விரும்பத் தக்கது தான். பொறுப்பில்லாமல், அரசாங்கத்தின் மீதோ, ஒரு கட்சியின் மீதோ, தனிப்பட்ட நபர்களின் மீதோ, அவர்களுடைய சமாதானக் காலக் கொள்கைகள் உங்களுடைய கொள்கையோடு ஒத்திருக்கவில்லை என்பதற்காகக் குறை கூறுவது, இப்பேர்ப்பட்ட சமயத்தில், மிகுந்த ஆபத்திற்கு உள்ளாக்கி விடும்.

எனது கோரிக்கை

நாம் செழித்து வாழுவது ஒருபுரமிருக்க, இந்திய மக்களின் வாழ்க்கையின் லட்சியம் வெற்றி பெறவேண்டி, உங்களை ஒன்று கோருகிறேன். உயரிய அரசியலிலாயினும், கட்சிக் கூட்டங்களிலாயினும், மத மகாநாடுகளிலாயினும், யுத்த முயற்சிக் கமிட்டிக் கூட்டங்களிலும் கூட, நமது கருத்துக்களைச் சாதிக்கப்படக் கூடிய முறையிலும், மிதமாகவும், காலப் போக்கை யுணர்ந்தும் கூற வேண்டும்.

கெட்ட எண்ணமுள்ள ரயில் சிப்பந்திகள்

("கோவை கிழார்" எழுதிய சிறு கதை.)

மங்கலம் ஒரு சிறிய இருப்புப் பாதை நிலையம். ஏற்றுமதியோ இறக்குமதியோ ஜனக் கூட்டமோ மிகக் குறைவு. தண்டவாளமும் இரண்டு ஜதை தான் உண்டு. ஒரு ஜதை நிலையத்திற்கு அடுத்து இருப்பது. அந்த வழியே தான் எல்லா வண்டித் தொடர்களும் செல்லும். இரண்டாவது ஜதை எதிர் வண்டி வருமாயின் ஒதுக்கி நிறுத்துவதற்கு ஏற்பட்டது. மக்கள், ஏறிச் செல்லும் இரண்டு வண்டித் தொடர்கள் இந்த நிலையத்திற்கு எப்போதும் வருவது கிடையாது. சரக்கு ஏற்றும் வண்டிகள் தான் இரண்டாவது பாதை வந்து நிற்பது உண்டு.

கவர்னர் ஸ்பெஷல்

ஒரு நாள் நிலயத்து அதிகாரிக்கு ஒரு செய்தி வந்தது. அடுத்த வியாழக்கிழமை இரவு 12-மணிக்கு கவர்னர் வண்டி வருகிறது. எல்லாம் பந்தோபஸ்தாக இருக்க வேண்டுமென்பதே அச் செய்தி. உடனே அவ்வதிகாரி தன் கீழ் உள்ள ஆட்களுக்கு எல்லாம் செய்ய வேண்டிய எச்சரிக்கைகள் செய்து வைத்தார். அந்த நேரத்தில் எதிரே ஒரு சரக்கு வண்டி வரவேண்டியது வழக்கம். ஆகவே அச் சரக்கு வண்டி காலம் தவறாது முன்னமே இரண்டாவது பாதையில் நிறுத்தி வைப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்து விட்டார். ஆட்கள் எல்லாம் முன் சாக்கிரதையாக வியாழக்கிழமை இரவை எதிர் பார்த்திருந்தார்கள். முக்கியமாகக் கந்த சுப்பிரமணியன் என்ற கணக்குப் பிள்ளையும் (clerk) பூவண்ணன் என்ற சந்தி அடைக்கும் ஆளும் (pointsman) வெகு ஆர்வத்துடனும் சுருசுருப்புடனும் வேலை செய்தார்கள்.

வியாழக்கிழமை நடுப்பகலில் ஆட்கள் எல்லாரும் சாப்பாட்டிற்குச் சென்றிருந்தார்கள். அதிகாரி மாத்திரம் நிலயத்தில் இருந்தார். அப்போது ஒரு அவசரத் தந்திச் செய்தி வந்தது. கவர்னர் வண்டி 11-மணிக்கு வரும் என்றும், எப்போதைப் போல 11-க்கு வரும் மெயில் வண்டி 12-மணிக்கு வரும் என்றும் செய்தியை இரகசியமாக வைத்து வைக்கும் படிக்கும் அது சொல்லிற்று. உடனே அதிகாரி அதை பத்திரப் பூடுத்திக் கொண்டு, வண்டிகளை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்.

அன்றிரவு

அன்று இரவு 11-மணிக்கு கவர்னர் வண்டி வெகு விரைவாக மங்கலம் நிலயத்தைத் தாண்டிச் சென்றது. ஆட்கள் எல்லாரும் அதனை மெயில் என்றே எண்ணினார்கள். ஒரு மணி நேரத்துக்குள் எதிரே சரக்கு வண்டி வந்து நிலயத்தில் இரண்டாவது பாதையில் நின்றது. நிலய அதிகாரி கவர்னர் வண்டி வந்ததும் கவலை தீர்ந்தது என்று எண்ணி அறையில் சிறிது இளைப்பாறச் சென்று விட்டார். நிலய மேடையில் கந்த சுப்பிரமணியனும் தண்டவாளத் தண்டை பூவண்ணனுமே பார்த்துக் கொண்டிருந்தனர். எதிரே இருந்து மெயில் வண்டி வெகு வேகத்துடன் 12-மணிக்கு வந்தது. ''வரி நோ'' என்ற குறியும் காட்டப்பட்டது. நிலயத்தின் எதிர் கோடியில் சரக்கு வண்டியின் கடைசி வண்டி சிறிது கோணலாக நின்றிருந்தது. 40 கல் விரைவில் போகும் மெயிலின் இயந்திரம் அப்படி நீட்டியிருந்த வண்டியின் மேல் பட்டவுடனே பாதை பிறழ்ந்து வெளியில் திடீரென்று விழுந்தது. உடனே அடுத்த ஐந்து வண்டிகளும் ஒன்றன் மேல் ஒன்று தாக்கி நிலயத்தில் சாய்ந்தன. இடி விழுந்தாற் போல் ஒரே சப்தம் ஏற்பட்டது. வண்டிகள் நொறுங்கிப் போயின. அடாத இருட்டில் ஒன்றும் தெரியவில்லை கூச்சலும் கூப்பாடும் அழுகையும் அளவில்லை. விளக்குகள் அணைந்தன. உயிர் இழந்தவர்களும், கைகால் துண்டுபட்டவர்களும் சரக்குகளுக்குள் நசுங்கினவர்களும் கணக்கு இல்லை. சிறிது நேரத்திற்கு முந்தி அமைதியாக இருந்த அந்த நிலயம் ஒரு வினாடியில் யமலோகக் காட்சி ஆகிவிட்டது. விழாமல் நின்ற வண்டிகளில் இருந்தவர்கள் உடனே எழுந்து வந்து விழுந்த மக்களுக்கு உதவி புரிந்தார்கள். அறைக்குள் இளைப்பாறிக் கொண்டிருந்த அதிகாரி திடுக்கிட்டு எழுந்து வந்து தன் விதியை நொந்து கொண்டும் தலையில் அடித்துக் கொண்டும் ஓடி வந்தார். காந்த விளக்குகள் கொண்டு வரப்பட்டன. நல்ல வேளையாக அந்த வண்டி தொடரில் 2, 3 வைத்தியர்களும் பல சிப்பாய்களும் இருந்தனர். அவர்கள் உடனே வந்து முதல் வைத்திய பரிகாரங்களைச் செய்தனர். இரவெல்லாம் ஒரே அழுகை தான். விடிந்தவுடன் பார்க்க வேண்டும் அக் கோரக் காட்சியை. எங்கு பார்த்தாலும் இரத்த வெள்ளம் தான். பெரியார், சிறியார், கிழவி, குமரி, கிழவன், குழந்தை, சிப்பாய், கூலியாள் முதலான அநேக பேர்கள் அறுந்தும், முறிந்தும், இறந்தும், மறந்தும் கிடந்தார்கள். ஐந்து வண்டிகள் துகள் துகளாகி இருந்தன. வண்டிக் கட்டைகள் ஏறி இறந்தவர் பலர்; சாமான்கள் மேல் விழுந்து நசுங்கினவர் பலர்; பலகை இடுக்குள் சிக்கி உயிர் துறந்தவர் பலர்; கண்ணாடி உடைந்து உடலில் ஏறி இறந்தவர் பலர்; இவ்விதமாகப் பல காரணங்களினாலும் உயிர் துறந்தவர்கள், உறுப்புகள் சிதைந்தார்கள் எண்ண முடியாமல் கிடந்தனர். சிறிது நேரத்திற்குள் அடுத்த சந்தியிலிருந்து உதவி வண்டி வந்தது. வைத்தியர்களும் உத்தியோகஸ்தர்களும் வந்தார்கள். இறவாது காயப்பட்ட மக்களை உடனே அடுத்த நகரத்திற்கு ஏற்றிச்

சென்றனர். மற்ற அடிபடாத பிரயாணிகளை மறு வண்டியில் ஏற்றினர். பிறகு சாவதானமாகக் கணக்குப் பார்க்கையில் 52 பேர் இறந்தார்கள் என்றும் 63 பேர் படு காயம் அடைந்தார்கள் என்றும் 100 பேர் சிறு காயம் பட்டார்கள் என்றும் அறிக்கை யிடப்பட்டது. அடுத்த இரண்டு மூன்று நாட்களில் மற்றும் 5 பேர் உயிர் துறந்தார்கள். உயிர் துறந்தவர்களில் 50 பேர் சிப்பாய்கள் இரணகளத்தில் தேச நன்மைக்கு உயிர் துறப்பதற்கு மாருக, இந்த விபத்தில் உயிர் துறக்க வேண்டுமென்ற தலைவிதி அவர்களுக்கு இருந்தது போலும்.

விபத்து விசாரணை

இரண்டு நாட்களாய் விபத்தைப் பற்றி விசாரணை நடந்து ஒரு அறிக்கை யிடப்பட்டது. அதில் இராஜரீகப் புரட்சி எதுவும் இல்லை என்றும், விபத்து தற்செயலாய் அகஸ்மாத்தாய் விளைந்தது என்றும், அதனை முழுதும் விசாரிக்க ரயில் நிலையப் பெரு அதிகாரியும் ஒரு நீதிபதியும் சென்றிருக்கிருர்கள் என்றும் அவ்வறிக்கை தெரிவித்தது. மறுபடியும் இறந்தவர்கள் காயப்பட்டவர்கள் ஜாபதா ஒன்று வெளியிடப்பட்டது. இராஜப் பிரதிநிதியும் சர்க்காரும் துக்கச் செய்திகளைக் கேட்டு அனுதாபப்படுவதாகத் தெரிவித்தார்கள்.

அடுத்த வாரத்தில் பெரிய அதிகாரிகள் விசாரணை தொடங்கியது. நிலைய ஆட்கள் எல்லாரும் சாட்சி கூறினர்கள். முன்னமே தங்களை தப்புவித்துக் கொள்ளும் விதங்களை எல்லாம் தீர ஆலோசித்து வந்திருந்த ஆட்கள் அதற்குத் தகுந்தபடி சாட்சி சொன்னர்கள். விசாரணை நடந்தது. ஒரு காரணமும் விளங்கவில்லை. அதிகாரிகளுக்கு ஒன்றும் துப்பு கிடைக்கவில்லை. தற்செயலாக விபத்து நடந்தது ; இனிமேல் நடவாததற்கு என்ன வேண்டியவையோ அவைகளை விபரமாகக் குறித்து ஒரு தீர்ப்புச் சொன்னர்கள். இறந்தவர்களில் பெரும்பான்மையான பேர் சிப்பாய்களாகவும் மற்றவர்கள் மிகக் குறைவானவர்களாகவும் இருந்தபடியால், நாட்டில் இந்த விபத்தைப் பற்றி அதிகமாகக் குழப்பமோ குற்றச் சாட்டோ வெளிவராமல் இருந்தது.

சரக்கு வண்டி சிறிது வெளியே நீட்டியிருந்ததே விபத்துக்குக் காரணமாக இருந்தும், அச்செய்தி சாட்சியத்திலும் வரவில்லை. விசாரணை அறிக்கையிலும் இல்லை. இருப்புப் பாதை உயர் பதவி உத்தியோகஸ்தர்கள் இந்த இரகசியத்தை ஊகித்திருக்க முடியும். ஆனல் அதை வெளியிட்டால் கம்பெனியின் மீது நஷ்ட ஈட்டு வழக்குகள் அதிகமாக வந்துவிடுமோ என்று அவர்கள் அவ்வெண்ணத்தை அடக்கி வைத்துக் கொண்டார்கள் என்று பொது மக்களில் ஒரு வதந்தி உலாவிக் கொண்டிருந்தது. நிலைய ஆட்களோ தாங்கள் தப்பித்துக் கொண்டோம் என்று வெகு ஆனந்தத்துடன் இருந்தார்கள்.

தேவகிரி கடிதங்கள்

நிலைய அதிகாரி ஒரு நாள் தன் அறையில் வேலை செய்து கொண்டிருந்தார். தான் கணக்குக் குறித்து வைத்திருந்த ஒரு காகிதத் துண்டு காற்றில் அகப்பட்டு குப்பைக் கூடையில் விழுந்தது. அதைத் துழாவினர். அதில் நான்காகக் கிழிந்த ஒரு துண்டுக் கடிதம் கிடந்தது. அதை எடுத்துச் சரிப்படுத்தி வாசித்தார். அதில்,

தேவகிரி.

"வந்தனம். கடிதம் கிடைத்தது. பெரிய வெள்ளாடு வியாழக்கிழமை வருகிறதா? நடு நிசியில் பூசாரியிடம் சொல்லி காளிக்கு பலியிட வேண்டும். காணிக்கை அனுப்பி யிருக்கிறேன். பகிர்ந்து கொள்க.

திண்ணன்.

மங்கலம் கண்ணனுக்கு."

என்று இருந்தது. இதைக் கண்டவுடன் பொருள் விளங்க வில்லை. இங்கே இப்பெயர் உள்ளவர்கள் இல்லையே. மேலும் காளி கோயில் இல்லையே யென்று எண்ணினர். மறுபடியும் மற்ற கிழிந்த குப்பைகளைக் கிளறினர். மற்றென்று அதே எழுத்தில் இருந்தது.

தேவகிரி.

"சிறிதும் திருப்தி யில்லை. நடு நிசியில் வெள்ளாடு வந்தும் அதனைப் பலி இடாமல் தப்பிப் போகவிட்டுப் பல செம்மறி ஆடுகளை பலியிட்டான் பூசாரி. இத்தப்பு மன்னிக்க முடியாது. காளியின் கோபம் மகா கொடியது. பூசாரிக்கு எச்சரிக்கை யிடு. உனக்கும் எச்சரிக்கை.

திண்ணன்.

மங்கலம் கண்ணனுக்கு."

இதனை வாசித்ததும் பெருத்த சந்தேகம் ஏற்பட்டது அதிகாரிக்கு. இரண்டு கடிதங்களையும் பத்திரப் படுத்தி இரகசியப் போலீஸ் அதிகாரிக்கு அனுப்பி வைத்தார் நிலைய அதிகாரி.

மங்கலத்திலேயே விபத்து ஞாபகமே குறையத் தொடங்கியது. மக்கள் எப்போதும் போலவே வேலை செய்யத் தொடங்கினர். அந்த சுப்பிரமணியன் தன் விலாசத்தை ஏற்படுத்திக் கொண்டான். தடபுடலாக துணி மணிகளை வாங்கினன். விவாகத்திற்காக விடுமுறை வேண்டும் என்று மனுவும் போட்டுவிட்டு உத்திரவிற்காக காத்துக் கொண்டிருந்தான். பூவண்ணனும் தன் மகளுக்கு மணம் செய்ய ஒரு நாள் குறித்திருந்தான். தடபுடலான அத்து மீறிச் செலவு செய்து கொண்டிருந்தான். நிலைய அதிகாரிக்கு இவ்விருவரும் செய்து கொண்டிருந்த செலவுகளைப் பார்த்து மயங்கினர். இவர்களுக்கு இவ்வளவு பணம் ஏது என்று சிந்தித்துக் கொண்டிருந்தார்.

கெட்ட ரயில் சிப்பந்திகள்

ஒரு நாள் இரகசிய இலாகா அதிகாரி ஒருவர் மங்கலத்திற்கு வந்து வண்டியை விட்டு இறங்கினர். அவர் சாதாரண உடை அணிந்திருந்ததனல் யார் என்று ஒருவரும் அறிந்து கொள்ளவில்லை. நிலைய அதிகாரி யிடம் சிறிது நேரம் தனியாகப் பேசிக்கொண்டிருந்தார். வடக்கே ஒரு ஊரில் அராஜரீகச் செயலாளர்களைப் பற்றி இரகசிய விசாரணை செய்த போது, திகம்பர லால் என்ற ஒருவன் அகப்பட்டான் என்றும் அவனுடைய அறையைப் பரிசோதித்த போது இரண்டு கடிதங்கள் கிடைத்தன வென்றும் அவைகளைப்பற்றி விசாரிக்கவே வந்ததாகவும் சொன்னர்.

"பெரிய வெள்ளாடு வரும் காலம் தெரிய வந்தது. இந்த வியாழக்கிழமை நடு நிசியில் வருகிறது. பூசாரியிடம் பலி இட ஏற்பாடு செய்கிறேன். தகுந்த காணிக்கை வேண்டும்.

கண்ணன்.

தேவகிரி திண்ணனுக்கு."

"பெரிய வெள்ளாடு நேரத்திற்கு முந்தி வந்து ஓடிவிட்டது. தெரியவில்லை. பதிலாக செம்மறியாடுகளை பூசாரி பலியிட்டான்.

கண்ணன்.

தேவகிரி திண்ணனுக்கு."

கடிதங்களை வாசித்ததும் நிலைய அதிகாரி ஆச்சரியப்பட்டார். "க" "பூ" என்ற பெயருடையவர்கள் யார் இங்கே இருக்கிருர்கள் என்று இரகசிய அதிகாரி விசாரித்தார். "கந்த சுப்பிரமணியன்" "பூ வண்ணன்" என்று நிலைய அதிகாரி கூறினர். அவர்களுடைய தற்கால நிலைமை என்ன என்ருர். விவாகங்களுக்குச் செய்து கொண்டிருக்கும் பெருவாரியான செலவுகளைப் பற்றி எடுத்துச் சொன்னர். உடனே கந்த சுப்பிரமணியனுடைய கடிதங்களும் புஸ்தகங்களும் பரிசோதிக்கப்பட்டன. தேவகிரி கடிதங்கள் எழுத்துக்களும் அவனுடைய கையெழுத்தும் ஒத்து இருந்தன. அதிகாரி சிலவற்றை எடுத்துக்கொண்டார்.

கந்த சுப்பிரமணியனையும், பூவண்ணனையும் கண்டு யோக க்ஷேமங்களை விசாரித்துக் கொண்டிருந்தார் இரகசிய அதிகாரி. அப்போது மறு வண்டி வந்தது. அதில் தான் ஏறிக்கொண்டு அவர்களையும் சிறிது நேரம் ஏறி யிருக்கச் சொல்லி பேச்சை வளர்த்திக் கொண்டிருந்தார். பேசி முடிப்பதற்குள் வண்டி நகர்ந்தது. கதவைச் சாத்திக் கொண்டார் அதிகாரி. இருவரும் அவருடனே செல்ல நேரிட்டது.

கந்த சுப்பிரமணியனும், பூவண்ணனும் திரும்பி மங்கலத்துக்கு வரவேயில்லை. என்ன ஆனர்கள் என்று ஒருவருக்கும் தெரியாது.

வானெலி நாட் குறிப்பு.

1944-ம் ஸு மார்ச்சுமீ 29உ புதன்கிழமை மாலை 7 மணிக்கு மிஸ்டர் டி. எ. வி. நாதன் ; விஷயம் : "அச்சுப்பிரசாரம்."

கொள்கை ஒன்றே !

ஜெர்மனி மீது, நேச நாடுகள் வெகு மும்முரமாக, பகலிலும், இரவிலும், ஆயிரக் கணக்கான விமானங்களை அனுப்புகிறார்கள். அந்த விமானங்களை ஓட்டிச் செல்லுவோர் ஆயிரக் கணக்கானடன் வெடி குண்டுகளை மழையாகப் பொழிந்துவிட்டு வருகிறார்கள். அதிலும் சென்ற வாரத்தில் சேர்ந்தாப்போல் ஐந்து நாட்கள், ஒரு நிமிஷத்தைக் கூட வீணாக்காது, தொடர்ந்தாப்போல், விமானிகள் சீமையிலிருந்து புறப்படுவதும், விரோதி பூமி மீது குண்டுகளை உதிர்ப்பதும், திரும்புவதும், குண்டுகளை மறுபடி தங்கள் விமானங்களில் நிரப்பிக் கொள்வதும், திரும்பவும் போவதுமாக இருந்தார்கள்.

ருஷ்யாவிலே, செஞ்சேனை வீரர்கள், திடீர் திடீரென, எதிர்பாராத இடங்களில் பாய்ந்து, ஜெர்மானியரைச் சின்னா பின்னப் படுத்தி, அலங்கோலமாகப் பின்வாங்கி ஓடச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இத்தாலியிலே !

இத்தாலியிலே, சென்ற வாரம் ஒரு நாள் திடீரென ஆயிரக் கணக்கில் நேச விமானங்கள் கிளம்பின. காஸினோ என்னும் ஒரு நகர்மீது குண்டுமாரி பொழிந்தன. ஜெர்மானியர்கள் எகமாக நிறைந்துள்ள ஒரு சிறு பிரதேசத்தை இலக்காகக் கொண்டு, அங்கே இடைவிடாது குண்டுகளை எறிந்தார்கள். அதற்கப்பால், காஸினோ நகரிலே ஒரு வீடு கூட உருவாக இல்லை. எல்லாம் ஒரே பாழாகிவிட்டது. அதற்கப்பால், தரைப் படைகள் பலமான பீரங்கிப் பிரயோகம் செய்துவிட்டு அந்நகருக்குள் புகுந்தன. இதே சமயத்தில், அந்நகருக்கு வெளியே உள்ள பிரதேசங்கள் மீது விமானங்கள் குண்டுகளை விடாது வீசிக் கொண்டிருந்தன.

பர்மிய எல்லையிலே ஒரு அதிசயம் !

இங்கே, இந்திய பர்மிய எல்லையிலே, ஒரு அற்புதம் நடந்திருக்கிறது. எற்கெனவே டில்லியில் போட்ட திட்டப் பிரகாரமே அது நடந்திருக்கிறது. ஆனாலும் அது இத்தனை நாட்கள் தேவ ரகசியமாகவே இருந்திருக்கிறது. அது என்ன விஷயம் தெரியுமா? வட பர்மாவிலே, ஜப்பானியரது படைகள் இருக்குமிடத்திற்குப் பின்னாலே, மத்தியப் பிரதேசத்திலே, தரை மட்டத்திற்கு எழாயிரம் அடி உயரமுள்ள ஒரு இடத்திலே, வெகு சாமர்த்தியமாக, நேசதேசப் படைகள் போயிறங்கி, நன்றாக வேரூன்றிக் கொண்டுவிட்டன. மகா துணிச்சலான வேலை தானிது. முதலில் சிலர் விமானத்திலிருந்து அந்த இடத்தில் குதித்து, வெகு துரிதமாக, தரையைச் சமமாக்கி, அங்குள்ள மரங்களை வெட்டி, பிறகு, விமானங்கள் வந்திறங்க வழி செய்தார்கள். அந்த அற்புத விமான நிலையத்திலே, இரவோடு இரவாக, பல விமானங்களில் ஆட்களும், கோவேறு கழுதைகளும், ஜீப் என்ற அதிசய மோட்டார்களும், பீரங்கிகளும், வெடி மருந்துகளும், வேறு சில ஆயுதங்களும் கொண்டு இறக்கப்பட்டன

கோவேறு கழுதைக்குப் பாடம்

கோவேறு கழுதைகளை விமானங்களில் எறச் செய்வதற்காக, ஒரு மாதத்திற்கு முன்னாலிருந்தே பாடம் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். அப்புறம் உண்மையிலேயே விமான சவாரி செய்த பொழுது, ஒரு மிஸ்டர் கோவேறு கழுதையார் கால்களை உதைத்து, எகமாக மிரண்டு, விமானத்தையே ஆட்டி அலைத்து, அதற்கு ஆபத்தேற்படுத்தி விடுவார் போலிருந்ததாம். அப்படி ஒத்துழையாத ஒருவரை வீணாகச் சுமந்து கொண்டு போவானேன் என்று உடனே சுட்டுக் கொன்றுவிட்டார்கள். அதைப் பார்த்து மற்றவர்கள் பாடம் கற்றுக் கொண்டு, மரியாதையாகவும், அடக்க ஒடுக்கமாகவும் இருந்து விட்டார்களாம்.

பஸிபிக் பிரதேசத்திலே !

பஸிபிக் மகா சமுத்திரத்திலே, ட்ருக் தீவருகே, எங்கெங்கு சாத்யமோ, அங்கெல்லாம் அமெரிக்கப் படைகள் போய் இறங்கிக் கொண்டிருக்கின்றன. ரபால் எனும் பெரிய துறைமுகப் பிரதேசத்தை அடிக்கடி ஆஸ்திரேலிய, அமெரிக்க விமானங்கள் அடித்து நொறுக்குகின்றன. அட்மிரால்டி தீவுகளில், முக்யமான இடங்களையெல்லாம் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஜாவாவிலே சில இடங்களை வானத்திலிருந்து தாக்கியிருக்கிறார்கள். நெடுந்தூரம் பறக்கும் விமானங்களைத் துரிதமாக அமெரிக்காவிலிருந்து தயாரித்து அனுப்பிய வண்ணமிருக்கிறார்கள்.

நோக்கமென்ன ?

இத்தனை காரியங்களும் வெவ்வேறு பிரதேசங்களில், ஒன்றுக்கொன்று ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் நடந்து கொண்டிருக்கின்றன. ஆயினும், இவற்றை நடத்துவோரின் நோக்கமும், கொள்கையும் ஒன்றே தான். உலக சமாதானத்திற்குப் பங்கம் விளைவித்துக் கொண்டிருக்கும் அயோக்கியர்களை சட்புட் என்று அடக்கி, ஒடுக்கி, எவ்வளவு துரிதமாக யுத்தத்தை முடிக்கலாமோ, அவ்வளவு துரிதமாக முடித்துவிட வேண்டும்; அது தவிர, நமது விரோதிகளுக்கு ஜிவநாடிபோல் உள்ள போச்குவரத்து சாதனங்களை சாத்யமான இடங்களில் எல்லாம் புகுந்தடித்து சீர்குலைத்துவிட வேண்டும், அந்த சாதனங்களுக்கு ஆபத்தும், அவற்றில் அபார சேதமும் உண்டாக்கி விட்டால், எதிரிகளின் கொட்டம் தானே அடங்கி விடும் என்பது தான், பொது நோக்கமும், கொள்கையுமாகும். அந்தந்தப் பிரதேசத்திலே இடம், காலம், பலம், சௌகரியம் அனைத்தையும் கணக்கிலெடுத்துக் கொண்டு, சௌகரியம்போல் தாக்கும் முறையை மாற்றிக் கொண்டு, ஆனால், நமது விரோதிகள் கண்டு பிரமித்து, கதிகலங்கிப் போகும்படி ஜமாய்த்துக் கொண்டிருக்கிறார்கள் நேசதேசத்தார்.

ஐயோ ! அலங்கோலம் !

பாவம்! ருஷ்யாவிலே ஜெர்மானியப் படைகள் ஓடும் அலங்கோல ஓட்டத்தைப் பார்த்தால் பரிதாபமாகவே இருக்கிறது. ருஷ்யப் படைகள் தெற்கு ருஷ்யாவிலே, பக் எனும் நதியை வெகு சுலபமாகக் கடந்து, புயலென மேற்கே பாய்ந்து, முக்யமான நகர்களைக் கைப்பற்றி விட்டனர். செஞ்சேனையில் ஒரு பகுதியினர், டினீஸ்டர் என்ற அடுத்த நதியையும், சில இடங்களில் கடந்து விட்டார்கள். இந்த பக், டினீஸ்டர் நதிகளை ஜெர்மன் சேனாபதி ரொம்ப நம்பியிருந்தார். அவரது நம்பிக்கையைக் கரைத்து விட்டுவிட்டன அந்த ஆறுகள்.

இப்பொழுது ஜெர்மன் படை ருமேனியாவை நெருங்கிவிட்டன. அவை சிதறி ஓடுவதைப் பார்த்தால், இது குழப்பமா? எதாவது முன்னேற்பாடா? என்பதே தெரியவில்லையாம். முன்னேற்பாடு என்றால் அது மகா மோசமான எற்பாடு என்றே தோன்றுகிறது. ருமேனிய எண்ணெய் வயல்களைக் காக்க ஜெர்மன் சேனை விரும்புகிறாப் போலிருக்கிறது.

இன்னும் சில தினங்கள் போனால், "தெற்கு ருஷ்யாவிலே" என்று கூட எழுதவேண்டிய அவசியம் இராது, பெஸரோபியாவிலே அல்லது ருமேனியாவிலே சண்டை நடக்கத் தொடங்கி விட்டால், தெற்கு ருஷ்யாவைப் பற்றி என் எழுதப் போகிறோம். இந்த பெஸரோபியா பிரதேசம், ருமேனியா, ஜெர்மனியுடன் இந்தப் போரில் கலந்ததும், பாய்ந்து கௌவிக் கொண்ட பிரதேசமாகும். இதை, மண்டையிலடித்து துப்பச் செய்து விடுவார்கள் போலிருக்கிறது ருஷ்யர்கள்.

வித்தியாசம் என்ன ?

இன்னொரு பக்கத்திலே, இந்த யுத்தத்திற்கு முன்பிருந்த போலந்து எல்லைக்குள்ளே ருஷ்யர்கள் புகுந்திருக்கிறார்கள். ஜெர்மானியர் எங்கும் கடுமையாக எதிர்க்கத்தான் செய்கிறார்கள். ஆனாலும் எங்கும் சமாளித்து நிற்க அவர்களால் முடியவே இல்லை. ருஷ்யர்கள் தூசிகூட படாது புத்தப் புதிதாக மேலும் மேலும் முளைத்து, பூரண பலத்துடன் தாக்குகிறார்கள். ஆனால், ஜெர்மன் படைவரிசைகளோ, நொந்து போனவை. ஒய்வு ஒழிவு இல்லாமல் ஓடிக்கொண்டே இருக்கவேண்டிய மோசமான நிலைமையில் இருப்பவை. அவை எப்படி ருஷ்யர்களை எதிர்த்து நிற்க முடியும்?

ஐரோப்பிய யுத்தம் சீக்கிரமே முடிந்துவிடுமோ என்று எண்ணும்படியாகவே காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அமெரிக்காவிலிருந்தும், சீமையிலிருந்தும், பின்லாந்து, ருமேனியா, யூகோஸ்லாவியா ஆகிய நாடுகளைப் போரிலிருந்து

விலக்கிக்கொண்டு, மானத்தையும், மக்களுயிர்களையும், மட்டற்ற விலை மதிப்புள்ள நகர்களையும் காப்பாற்றிக் கொள்ளும்படி எச்சரிக்கைகளும், உபதேசங்களும் கிளம்பிக் கொண்டிருக்கின்றன. ஜெர்மனியை நெருங்கி வரும் பேராபத்தை ஹிட்லர் நன்றாக உணர்ந்து கொண்டிருக்கிறார். அது கூடத் தெரியாத, அவ்வளவு அசடா என்ன அவர்? நேசதேசத்தார் செய்யும் உபதேசங்களைக் கேட்டு, ஐரோப்பாவில் தமக்கடங்கிக் கிடக்கும் குட்டி நாடுகள் திடீரென்று குட்டிக்கரணம் போட்டு விட்டால் என்ன செய்வதென்ற பீதியிலே, ஹிட்லர் போன வாரம் ஒரு பலே காரியம் செய்திருக்கிறாப் போலிருக்கிறது.

ஹிட்லர் "ஸ்டண்ட்"

ஹங்கேரிய ரீஜெண்டான அட்மிரல் நிக்கோலஸ் ஹார்டி என்பவரை தன்னிடம் வந்து போகும்படி ஹிட்லர் சொல்லியனுப்பினாராம். அவரும் அவ்வண்ணமே ஹிட்லரின் இருப்பிடத்தை நாடிச் சென்றாராம். ஹிட்லரோடு அவர் பேசிக் கொண்டேயிருந்தாராம். அந்தச் சமயத்திலே, ஜெர்மன் படைகள் ஹங்கேரி நாடு முழுவதையும் கைப்பற்றி விட்டனவாம். ஹங்கேரிய ரீஜெண்டோ, சேனாபதியோ அந்த நாட்டிற்குள் பிரவேசிக்க முடியாதபடி ஜெர்மானியர் செய்து விட்டாப்போலிருக்கிறது என்கிறார்கள்.

அடுத்தபடியாக, ஜெர்மானியர் பாதுகாப்பு இடமாகக் கொள்ளக் கூடியவை கார்பதியன் மலைகள் தான். அங்கு நின்று சண்டை போட ஹங்கேரியின் ஒத்துழைப்புத் தேவை. அது கேட்டால் கிடைக்குமோ, கிடைக்காதோ; மரியாதைக் குறைவான பதில் ஏதாவது கிடைத்து விட்டால் என்ன செய்வது என்ற யோசனையோடு, ஹிட்லர் இந்த வேலை செய்து விட்டார் போலிருக்கிறது. தண்ணீரில் முழுகப் போகிறவன் செய்கிற காரியங்கள் எல்லாம் புத்திசாலித்தனமான காரியமாகவா இருக்கும்?

கார்பதியன் மலைக்கு நாற்பது மைல் தூரத்தில் இருக்கிறார்களாம் செஞ்சேனை வீரர்கள். அந்த மலைச் சிகரத்தை அவர்கள் தரிசித்து கொண்டிருக்கிறார்களாம் இப்பொழுது.

மறக்கத் தயார்! விட்டால்தானே?

ருஷ்யாவை ஹிட்லர் இப்பொழுது மறந்து விடத் தயார். விழுந்த அடி ஜெர்மனிக்கு ஏழேழு ஜென்மத்திற்கும் போதும். நெப்போலியன் ருஷ்யா மீது கையை வைத்து, அந்தக் கையை நன்றாகச் சுட்டுக் கொண்டார். இப்பொழுது ஹிட்லர், ருஷ்யா மீது கை வைத்ததன் பலனை இப்பொழுது உலகோர் அறிய அனுபவித்துக் கொண்டிருக்கிறார். அவர் செய்த அசட்டுக் காரியத்தின் பயனாக, ஜெர்மனியின் கைமட்டுமின்றி, உடல் முழுவதுமே பற்றிக் கொண்டு எரிகிறது. ருஷ்யா என்றால் என்ன என்பதை உலகோர் அறியச் செய்து விட்டது ஹிட்லரின் செய்கையின் பலனாக விளைந்த விளைவு. ஆகவே, ஹிட்லர் ருஷ்யாவை மறந்து விடத் தயார்.

ஆனால் ருஷ்யா அவரை அவ்வாறு மறக்க விடாது போலிருக்கிறதே! ருஷ்யர்கள் போட்டிருந்த பனிகாலத் திட்டம், வெகு ஜோராக நிறைவேறி விட்டதென்றே தோன்றுகிறது. இனி அவர்கள் தொடங்க வேண்டியது வசந்த காலத் திட்டம்தான்.

ஒரு தமாஷ்!

ஒரு தமாஷ் பார்த்தீர்களா? சென்ற வருஷம் இதே ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில் போர்ச் செய்திகளில் பனியும், பனி மழையும், அவற்றால் ஏற்படும் அவதிகளும் அடிக்கடி கலந்து வந்து கொண்டிருந்தன. அவையனைத்தும் இவ்வருடத்திய ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு மாதச் செய்திகளில் அதிகம் கலக்கவே இல்லை என்பதைக் கவனித்தீர்களா? பாய்ந்து வரும் ருஷ்யப் படைகள் அவற்றை எல்லாம் லக்ஷியம் செய்தாற்தானே அவை செய்திகளுக்குள் புக முடியப் போகிறது? ருஷ்யப் படைகள் தங்கள் தாய் நாட்டைத் தாக்க வந்த தடியர்களை தண்டப் பிரயோகம் செய்து, மண்டையை உடைத்து அனுப்பும் ஒரே நோக்கத்துடன், இடையிலே தோன்றும் எத்தகைய கஷ்டங்களையும் பொருட்படுத்தாது, தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருக்கின்றன. சீக்கிரமே சிரமம் பாராது யுத்தத்தை ஒரு வழியாக முடித்துக் கொண்டு விட்டால், அப்புறம் நிம்மதியாக தூங்கலாமோ இல்லையோ? அதற்குத்தான் ருஷ்யர்கள் இவ்வளவு அவசரப்படுகிறார்கள்.

பிரிட்டனிலே ஜரூர்

மேற்கே, பிரிட்டனில் வெகு ஜரூரான வேலைகள் நடக்கிறாப் போலிருக்கின்றது. இன்னும் சில வாரங்களுக்குள் பெரிய செய்தி, அதுவும் நல்ல செய்தி; மேற்கேயிருந்தும் 'நம்பளுக்கு' வரப் போகுது! வரப் போகுது! ஜெர்மனிக்காரன் ஐயோன்னு போகப் போறான்! நம்ப பிரிட்டிஷ் ஐயாவுக்கும், உலகத்துக்கும் நல்ல காலம் பொறக்கப் போகுது! குடுகுடு, குடுகுடு...

த்சு! த்சு! த்சு! செய்திகள் வருகிற ஜோரைப் பார்த்து, பேனாவிற்கே குஷி பிறந்து, நம்மைக் குடுகுடுப்பாண்டி ஆக்கப் பார்க்கிறது பாருங்கள்!

இரண்டாவது போர் முனை ஆரம்பமாகும் நாள் அதிக சமீபத்திலேயே இருக்கிறது என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. சீமையிலே வந்து குவிந்திருக்கும் படைகளுக்கு அளவேயில்லை. எல்லாம் சித்தமாக இருக்கின்றன. ஒத்திகை எல்லாம் தீர்ந்துவிட்டது. பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யத் தொடங்கி விட்டார்கள்.

முன்னேற்பாடுகள் மூன்று

முதலிலே, பிரிட்டனுக்கு மேற்கேயுள்ள சுதந்திர அயர்லாந்தில் உள்ள ஜெர்மானிய, ஜப்பானிய ஸ்தானிகர் காரியாலயங்களை மூடச் சொல்லும்படி அயர்லாந்து சர்க்காரை அமெரிக்கா கேட்டது. டிவாலராவின் அரசாங்கம் அதற்கு இணங்கவில்லை. 'நடு நிலைமை வகிக்கும் நாங்கள் அவ்வாறு செய்ய முடியாது' என்று கூறிவிட்டார் அவர். அப்புறம் என்ன செய்வது? லக்ஷக்கணக்கில் அமெரிக்கப் படைகள் சீமையில் இருக்கின்றன. அவற்றைப்பற்றி அயர்லாந்து வழியே ஹிட்லருக்குத் தகவல் போய்விட்டால் ஆபத்தல்லவா? ஆகவே, அமெரிக்காவிலிருந்து எவ்வித சாமான்களும் அயர்லாந்துக்கு அனுப்பப்படமாட்டாது என்றார்கள். 'பிரிட்டனிலிருந்தும், வட அயர்லாந்திலிருந்தும் யாரும் சுதந்திர அயர்லாந்திற்குச் செல்லக் கூடாது; இப்போதைக்கு அந்த அயர்லாந்துடன் தொடர்பு இராது' என்று பிரிட்டனும் கூறிவிட்டது. இது முதல் பாதுகாப்பு ஏற்பாடாயிற்றா?

அடுத்தபடியாக பிரிட்டனிலே, ரயில் போக்குவரத்திலே மாறுதல்கள் இருந்தாலும், ஏதாவது ரயில்கள் நிறுத்தப்படுவதாக இருந்தாலும், முன்னறிவிப்பு ஏதும் இராது; அந்தந்த மாறுதல், அந்தந்த ஸ்டேஷன்களில், கடைசி நிமிஷத்தில்தான் அறிவிக்கப்படும் என்று அதிகாரிகள் ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார்கள். இது இரண்டாவது பாதுகாப்பு.

மூன்றாவதாக, கிழக்கு பிரிட்டனிலே, சுமார் 600 மைல் நீளமும், பத்து மைல் அகலமும் உள்ள பிரதேசத்தை பொது ஜனங்கள் சர்வ சாதாரணமாக இனி உபயோகிக்க முடியாது. அந்தப் பிரதேசத்திலே வசிப்பவர்கள் அங்கங்கே இருக்கலாம். ஆனால் அப்பிரதேசத்திற்கு வெளியில் இருப்பவர்கள் அங்கு அநுமதியின்றிப் பிரவேசிக்க முடியாது. இது ஏப்ரல் முதல் தேதி அமுலுக்கு வருமாம். இந்தப் பிரதேசத்திலிருந்து, தூர திருஷ்டிக் கண்ணாடி மூலம் எதையும் பார்க்கக் கூடாது என்றும் உத்திரவு போட்டிருக்கிறார்கள். காரணமில்லாமலா இந்த உத்திரவுகள் எல்லாம் போட்டிருப்பார்கள்? ஜெர்மனி மீது விமானத் தாக்குதல்கள் கடுமையாக இருப்பதையும், இந்த உத்திரவுகளையும் சம்பந்தப் படுத்திப் பார்த்தால், ஹிட்லருக்கு இறுதித் தலைவலி இதோ வெகு சீக்கிரமே ஆரம்பமாகும் என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

அட்லாண்டிக் மகா சமுத்திரம், வட கடல், மத்யதரைக் கடல், ருஷ்யா இங்கெல்லாம் ஜெர்மானியரால் தலை தூக்கி நிற்க முடியவில்லை. இப்பொழுது மேற்றிசையிலிருந்தும், தரை வழியாக ஆபத்தேற்படத்தான் போகிறது. இனி ஹிட்லரோ, ஜெர்மனியோ தப்புவதென்பது அசாத்தியம்.

சிரமம்தான்! தெரியுமே!

ஆனால், இந்த ஐரோப்பிய இரண்டாம் போர் முனைப் போர் அதி பயங்கரமானதாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை. இதில் உள்ள சிரமங்களை யெல்லாம், நேசதேசத் தலைவர் கணக்கிலெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதிலே பலமான நஷ்டம் ஏற்படும் என்பதை உணர்ந்து, அதற்கெல்லாம் சித்தமாகவே இருக்கிறார்கள். ரொம்பப் பெரிய காரியம் இது. இதிலே முடிவில் கிடைக்கக் கூடிய பிரமாண்டமான பலனை உத்தேசிக்கும் பொழுது, இடையில் ஏற்படக் கூடிய நஷ்டங்கள், பெரிதல்ல. இப்பொழுது, ஜெர்மனி, ஜப்பான் உள்பட எந்த நாட்டினரை வேண்டுமானாலும், தனித் தழைத்து, 'உங்களுக்கு என்ன வேண்டும்?' என்று கேட்டால், 'யுத்தம் நிற்க வேண்டும்' என்ற பதிலே கிடைக்கும். அவ்வளவு கஷ்டப்பட்டுப் போயிருக்கிறார்களையா எல்லோரும்.

யுத்த நாட் குறிப்புக்கள்

பிரிட்டனும், ஜெர்மனியும்.

மார்ச்சு 15.—டோவர் ஜலசந்திக்கு அப்பால் போய்க் கொண்டிருந்த ஒரு ஜெர்மன் சாமான் கப்பல் கூட்டத்தை பிரிட்டிஷ் கடற்கரைப் படைகள் தாக்கின.

மார்ச்சு 18.—பட்டப் பகலில் ஜெர்மனியின் மேல் பகுதியில் உள்ள இடங்களை 2,000 அமெரிக்க வெடிகுண்டு விமானங்கள் தாக்கின.

பிரிட்டனில் சேமிப்புத் திட்டம் வெற்றிபெற வேண்டு மென்று வாழ்த்தி, மிஸ்டர் சர்ச்சில் ஒரு செய்தி யனுப்பியிருக்கிறார்.

மார்ச்சு 20.—போர் காரணமாக, இங்கிலாந்தில் 6,000 சதுர மைல் விஸ்தீர்ணத்திற்குப் பொது மக்கள் போகக் கூடாதெனறு தடை உத்தரவு பிறந்திருக்கிறது, என்று யுத்த மந்திரி சர் ஜேம்ஸ் க்ரிக்ஸ் அறிவித்தார்.

தென் மேற் ஜெர்மனியி லுள்ள கேந்திர ஸ்தானங்கள் தாக்கப்பட்டன.

அமெரிக்காவும், அட்லாண்டிக்கும்.

மார்ச்சு 18.—'கேப்லின்,' 'ஸ்கல்பின்' என்னும் இரண்டு அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல்களும் மூழ்கி விட்டன வென்று நினைக்க வேண்டியிருக்கிறது.

மார்ச்சு 19.—பிரிட்டனுக்கு அமெரிக்கா கொடுத்துள்ள குத்தகைக் கடன் சம்பந்தமாக, அமெரிக்க மந்திரி மிஸ்டர் கார்டெல் ஹல்லும், அந்நிய நாட்டுப் பொருளாதார நிர்வாகியான மிஸ்டர் லியோ டி. க்ரரம்லியும் அறிக்கைகள் விடுத்திருக்கிறார்கள்.

மார்ச்சு 20.—அமெரிக்கத் துணைக் கப்பலான 'லெபால்ட்' என்னும் நாசகாரிக் கப்பல், அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில் மூழ்கி விட்டதாக அமெரிக்கக் கப்பற் படையிலாக்கா அறிக்கை கூறுகிறது.

அமெரிக்காவுக்குச் சொந்தமான நீர்மூழ்கி மீட்சிக் கப்பல் 'மாகா' பசிபிக் மகா சமுத்திரத்தில் பிப்ரவரி மாதம் 13-ம் தேதி மூழ்கி விட்டதாகத் தெரிகிறது.

மார்ச்சு 21.—அமெரிக்கத் தலைவர் மிஸ்டர் ரூஸ்வெல்ட்டுக்கு ஜலதோஷம்.

இந்தியா, பர்மா, இலங்கை.

மார்ச்சு 15.—நேற்று, ரஜபில் கோட்டைப் பகுதியில் மேலும் சில முக்கியமான இடங்களை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றின.

மார்ச்சு 17.—**வைஸ் மார்ஷல் எம். தாமஸ்,** இந்திய விமானப் படைத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஜப்பானியர் வசமுள்ள அரக்கான் கரையோரங்களில் பிரிட்டிஷ் படைகளும் மேற்காப்பிரிக்கப் படைகளும் இறங்கி, 6 கிராமங்களைக் கைப்பற்றிக் கொண்டார்களென்று வெளியாகிறது.

வட பர்மாவின் மத்தியில், நேச நாடுகளுக்கு ஒரு தளம் அமைக்கப் பட்டு விட்டது.

மார்ச்சு 20.—வட பர்மாவில் போராடிக் கொண்டிருக்கும் படையினரைப் பாராட்டி லார்ட் லூயிமௌண்ட்பேட்டன் ஒரு பாராட்டுச் செய்தி அனுப்பியிருக்கிறார்.

மார்ச்சு 21.—வட பர்மாவிலுள்ள இரண்டு முக்கிய ஸ்தானங்களான **ஜம்புபம்மையும், சம்ப்ரா பம்மையும்** நேசநாட்டுப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

ரஷ்யாவும், பின்லந்தும்.

மார்ச்சு 15.—**ஊரோவிட்ஸா, ட்ராஸ்டினெட்ஸ், பெரிஸ்னிகோ படையா, ஸ்னெகிரோப்கா** ஆகிய ஊர்களைச் செம் படைகள் கைப்பற்றின.

ஒடெஸ்ஸா, நிகொலேப் முதலிய 6 இடங்கள் உக்ரேனில் மான்ஸ்டீனுக்கு முக்கியமானவை. இவற்றிற்கு இப்போது ஆபத்து எற்பட்டிருக்கிறது.

மார்ச்சு 16.—பக் ஆற்றை ரஷ்யர்கள் கடந்து விட்டார்கள். **வக்மியார்ட்ஸா, கபுஸ்தியோ, நோவாகோப்கா** முதலிய நூற்றுக் கணக்கான இடங்களை ரஷ்யர்கள் கைப்பற்றினார்கள்.

ரஷ்யாவின் சமரச நிபந்தனைகளை பின்லாந்து அரசாங்கம் பரிசீலனை செய்தது.

யுத்தத்தினின்று விலகிக்கொள்ளும்படி மிஸ்டர் ரூஸ்வெல்டும், ஸ்வீடன் அரசர் கஸ்டோவும் பின்லாந்தை வற்புறுத்தி யிருக்கிறார்கள்.

மார்ச்சு 17.—**டப்னோ, டெமிடோப்கா, டர்கோவிகா** ஆகிய ஊர்களை ரஷ்யப் படைகள் கைப்பற்றி, பல விடங்களில் டினீஸ்டர் ஆற்றை அடைந்து விட்டார்கள்.

மார்ச்சு 18.—**ஷ்மெரிங்கா, பொனெஷ்னேயா, நோவாஉக்ரேனிகா** முதலிய இடங்களை ரஷ்யப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

யாம்போல், ப்னிஸ்டா முதலிய ஊர்களையும், டினீஸ்டர் ஆற்றை யடுத்துள்ள பட்டணங்களையும் கிராமங்களையும் ரஷ்யப் படைகள் கைப்பற்றின.

மார்ச்சு 19. — வெனிட்ஸாவிற்குள் சோவியத் படைகள் புகுந்தன. **க்ரியினெட்ஸ்** என்னுமிடத்தைக் கைப்பற்றின. **சரோகா** முதலிய 40 இடங்களை சோவியத் படைகள் கைப்பற்றின.

மார்ச்சு 20.—**மொகிலேப், பொடோல்ஸ்கி, வின்னிட்சா, செர்வோனோ, ஆர்மீஸ்க், ராட்சில்பிலோ** ஆகிய ஊர்களை ரஷ்யர்கள் கைப்பற்றினார்கள்.

மார்ச்சு 21.—பாஸ்ஸரேபியாவில் மார்ஷல் கோனேயின் முன்னணிப் படைகள் பால்டி என்னும் முக்கியமான ரயில்வே ஜங்ஷனுக்கு 7 மைல் தூரத்தில் தானிருக்கின்றன. ருமேனிய எல்லைப்புரத்திற்கு 50 மைல்களுக்கு அப்பால் தான் பால்டி இருக்கிறது.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்திய தரைக் கடல் பகுதி.

மார்ச்சு 16.—காசினோ அடியோடு அழிக்கப்பட்டது.

மார்ச்சு 17.—படாக்லியோ அரசாங்கத்தை அங்கீகரிப்பது பற்றி அமெரிக்கா புனராலோசனை செய்யாது என்று அமெரிக்க மந்திரி மிஸ்டர் கார்டெல் ஹல் குறிப்பிட்டார்.

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரி வயப்பட்ட நாடுகள்.

மார்ச்சு 15.—யூகோஸ்லாவ் மன்னர் பீட்டரோடு, அந்நாடு பற்றி தாம் விவாதிக்கக் கூடு மென்று மிஸ்டர் ஈடன் பார்லிமெண்டில் குறிப்பிட்டார்.

மார்ச்சு 17.—வடக்கு ஸ்லோவினியாவில், ஆஸ்டிரிய எல்லைப்புரத்தில் கடுமையான போராட்டம் நடப்பதாக மார்ஷல் டைட்டோவின் அறிக்கை கூறுகிறது.

பிரஞ்சு தேசீய மீட்சிக் கமிட்டியின் நிலைமை பற்றி, தான் ஒரு முடிவுக்கு வந்து விட்டதாக, மிஸ்டர் ரூஸ்வெல்ட் அறிவித்தார்.

மார்ச்சு 18.—பிரஞ்சு ஆலோசனை சபை முன் ஜெனரல் டிகால் ஒரு பிரசங்கம் செய்தார்.

மார்ச்சு 20.—**நாஜிகள் ஹங்கேரி முழுவதையும் கைப்பற்றிக் கொண்டார்கள்.**

மார்ச்சு 21.—யுகோஸ்லாவியாவில் ஸ்ரெம் மாகாணத்தில் அச்சுத் தாக்குதல் தகர்தெறியப்பட்டது.

நடு நிலைமை நாடுகள்.

மார்ச்சு 17.—தான் நடு நிலைமை வகிப்பது தான் சரி என்று மெய்ப்பித்து டி வலேரா ஒரு வானொலிப் பிரசங்கம் செய்தார்.

தூரக் கிழக்கு நாடுகள்.

மார்ச்சு 15.—வாஷிங்டனிலிருந்து அட்மிரல் நிமிட்ஸ் பெர்ல் துறைமுகத்திலுள்ள தன் தலைமைக் காரியாலயத்திற்கு வந்து சேர்ந்தார்.

மார்ச்சு 16.—**ஹாவெய், பட்ஜாஜோ** என்னும் தீவுகளை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றின.

மார்ச்சு 17.—அட்மிரால்டி தீவுகளைச் சேர்ந்த மானஸ் தீவில், நேச நாட்டுப் படைகள் இறங்கிவிட்டன.

ஜெனரல் மெக்கார்தருக்கு மாட்சிமை தங்கிய ஜார்ஜ் மன்னர் வழங்கிய ஜி.சி.பி. பதக்கத்தை ஆஸ்திரேலிய கவர்னர் ஜெனரல் லார்ட் கௌரி, அவருக்குச் சூட்டினார்.

மார்ச்சு 19.—லெரெங்கனை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றிவிட்டன. இப்போது அட்மிரல்டி தீவுகளிலுள்ள முக்கியமான இடங்க ளெல்லாம் நேசநாட்டுப் படைகள் கைக்கு வந்து விட்டன.

மார்ச்சு 21.—பிளாக்குக்கு அருகில் ஒரு ஜப்பானிய கப்பற் கூட்டத்தில் 5 கப்பல்களை நேச நாட்டு வெடி குண்டு விமானங்கள் மூழ்கடித்து விட்டன.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.